# சாமுவேலின் புத்தகம்

**பாடம் 2**

சாமுவேல் மற்றும் சவுல்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ 1

அரசாட்சிக்கான சாமுவேலின் அறிமுகம் (1 சாமுவேல் 1-7) ........ 3

அமைப்பும் உள்ளடக்கமும் ........ 3

சாமுவேலின் ஆரம்ப ஆண்டுகள் (1 சாமுவேல் 1:1–2:11). ........ 4

தலைமைத்துவத்தில் மாற்றம் (1 சாமுவேல் 2:12–7:17). ........ 9

கிறிஸ்தவ பயன்பாடு ........ 16

தேவனுடைய உடன்படிக்கைகள் ........ 17

தேவனுடைய ராஜ்யம் ........ 19

சவுலின் தோல்வியுற்ற அரசாட்சி ........ 22

அமைப்பும் உள்ளடக்கமும் ........ 22

சவுலின் ஆரம்ப ஆண்டுகள் (1 சாமுவேல் 8:1–15:35) ........ 23

தலைமைத்துவத்தில் மாற்றம் (1 சாமுவேல் 16:1 – 2 சாமுவேல் 1:27) ........ 31

கிறிஸ்தவ பயன்பாடு ........ 45

தேவனுடைய உடன்படிக்கைகள் ........ 46

தேவனுடைய ராஜ்யம் ........ 49

முடிவுரை ........ 51



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஒரு நீண்ட பயணத்தில் ஆண்கள் குழுவை வழிநடத்திய ஒரு வழிகாட்டியைப் பற்றிய கதை இருக்கிறது. முதல் நாள் முடிவில், இளைஞர்களில் ஒருவர் பின்வருமாறு புகார் கூறினான். ”இது அதிக நேரம் எடுக்கிறது, ஒருவேளை நாம் தவறான வழியில் சென்றுவிட்டோம் என்று நினைக்கிறேன்” என்றான். ஆனால் வழிகாட்டி நம்பிக்கையுடன் இருந்தார். அவர் தனது வரைபடத்தை எடுத்து முழு குழுவிற்கும் அவர்கள் அன்று இருந்த இடத்தைக் காட்டினார். ”நாம் சரியான பாதையைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறோம்” என்று அவர் அவர்களுக்கு உறுதியளித்தார்.

பல வழிகளில், சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் தனது புத்தகத்தை எழுதியபோது அதையே செய்தார். தாவீது ராஜாவான பிறகு, முன்னோர்கள் தவறான பாதையில் போய்விட்டார்களா என்று இஸ்ரவேலரில் வாழ்ந்த நிறைய பேர் யோசித்தார்கள். பல ஆண்டுகளாக, தாவீதின் வம்சம் இஸ்ரவேலுக்கு பல தொல்லைகளைக் கொண்டுவந்திருந்தது. ஆனால் சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் நம்பிக்கையுடன் இருந்தார். தனது புத்தகத்தை முதலில் பெற்றவர்களுக்கு அவர்கள் நிச்சயமாக சரியான பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர் என்பதை அவர் நினைவூட்டினார். தாவீதின் அரசாட்சிக்கு வழிநடத்திய பாதை தேவனே அவர்களை வழிநடத்திய பாதை என்பதை அவர்களுக்கு உறுதியளிக்க அவர் எழுதினார்.

சாமுவேலின் புத்தகத்தைப் பற்றிய நமது தொடரின் இரண்டாவது பாடம் இது, அதற்கு ”சாமுவேல் மற்றும் சவுல்” என்று தலைப்பிட்டுள்ளோம். இந்த பாடத்தில், சாமுவேல் மற்றும் சவுல் இருவரின் வாழ்க்கையிலும் தேவன் இஸ்ரவேலை சரியான திசையில் வழிநடத்தினார் என்பதை நமது புத்தகத்தின் முதல் இரண்டு முக்கிய பிரிவுகள் எவ்வாறு கற்பிக்கின்றன என்பதைப் பார்ப்போம். இன்று கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நம் வாழ்க்கைக்கு இந்த அதிகாரங்கள் எவ்வாறு பொருந்துகின்றன என்பதையும் பார்ப்போம்.

சாமுவேல், சவுல், தாவீது ஆகியோர் நமது புத்தகத்தின் மூன்று முக்கிய பிரிவுகளில் மைய இடத்தை வகிக்கிறார்கள் என்பதை நமது முந்தைய பாடத்திலிருந்து நீங்கள் நினைவுகூரலாம். முதலாவதாக, 1 சாமுவேல் 1-7 இல் அரசாட்சிக்கான சாமுவேலின் முன்னுரையைப் பற்றி வாசிக்கிறோம். பின்னர் 1 சாமுவேல் 8 - 2 சாமுவேல் 1 இல் சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியைக் காண்கிறோம். இறுதியாக, 2 சாமுவேல் 2-24 இல் தாவீதின் நீடித்த அரசாட்சியைப் பற்றி நாம் அறிகிறோம்.

பிளவுபட்ட ராஜ்யம் நிலவிய சமயத்திலோ பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்ட காலத்திலோ இஸ்ரவேலர் கடுமையான சோதனைகளை எதிர்ப்பட்டபோது சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் இந்தப் புத்தகத்தை எழுதினார். இந்த சிக்கலான காலங்களில் அவரது புத்தகத்தை முதலில் பெற்றவர்களிடம் சொல்ல அவருக்கு பல விஷயங்கள் இருந்தன. நமது முந்தைய பாடத்தில் அவரது பரந்த நோக்கத்தை இந்த வழியில் சுருக்கமாகக் கூறினோம்:

> **இஸ்ரவேல் அரச பதவிக்கு மாறியது தாவீதுடன் தேவன் ஏற்படுத்தின உடன்படிக்கையில் உச்சக்கட்டத்தை அடைந்தது, இதனால் இஸ்ரவேல் தேவனுடைய ராஜ்யத்திற்கான தங்கள் நம்பிக்கையை தாவீதினுடைய வீட்டின் நீதியான ஆட்சியில் வைக்கும் என்பதை சாமுவேலின் ஆசிரியர் விளக்கினார்.**

ஒருபுறம், சாமுவேலின் ஆசிரியர் தனது அசல் வாசகர்கள் தேவனுடைய உடன்படிக்கைகளின் இயக்கவியலின் அடிப்படையில் கடந்த காலத்தைப் பார்க்க வேண்டும் என்று விரும்பினார். இன்னும் குறிப்பாக, இஸ்ரவேலர் அரசாட்சிக்கு மாறியது தாவீதுடன் தேவன் செய்த உடன்படிக்கையில் எவ்வாறு உச்சக்கட்டத்தை அடைந்தது என்பதை அவர்கள் காண வேண்டும் என்று அவர் விரும்பினார். மறுபக்கத்தில், தாவீதின் குடும்பத்தின் நீதியுள்ள ஆட்சியில் தேவனுடைய ராஜ்யத்தின் எதிர்காலத்திற்கான நம்பிக்கைகளை வைக்க தனது வாசகரை அழைப்பதன் மூலம் அவர் தேவனுடைய ராஜ்யத்தின் மீது கவனம் செலுத்தினார். இந்த பாடத்தில், சாமுவேல் மற்றும் சவுல் பற்றிய காரியங்களை உள்ளடக்கிய இந்த புத்தகத்தில் இந்த இரட்டை நோக்கம் எவ்வாறு முன்னணிக்கு வருகிறது என்பதை நாம் பார்ப்போம்.

சாமுவேல் மற்றும் சவுலின் வாழ்க்கையைப் பற்றிய நமது ஆராய்ச்சி இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலாவதாக, 1 சாமுவேல் 1-7 இல் சாமுவேலின் அரசாட்சிக்கான முன்னுரையைப் பார்ப்போம். பின்னர் 1 சாமுவேல் 8 - 2 சாமுவேல் 1-ல் சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியைப் பற்றிப் பார்ப்போம். இந்த இரண்டு பிரிவுகளும் நமது ஆசிரியரின் பரந்த நோக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு இன்றியமையாதவை. 1 சாமுவேல் 1-7 இல் உள்ள அரசாட்சிக்கான சாமுவேலின் முன்னுரையுடன் தொடங்குவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# அரசாட்சிக்கான சாமுவேலின் அறிமுகம் (1 சாமுவேல் 1–7)

நியாயாதிபதிகளினுடைய புத்தகத்தின் கடைசி அதிகாரங்கள், வடக்கு கோத்திர பிராந்தியங்களில் இருந்த உண்மையற்ற லேவியர்கள் தேவனுக்கு விரோதமாக கலகம் செய்வதில் இஸ்ரவேலரை வழிநடத்தியதாக அறிவிக்கின்றன. நியாயாதிபதிகளின் புத்தகத்தின் ஆசிரியர் இது ஒரு முக்கிய காரணத்திற்காக நடந்தது என்று விளக்கினார். ”அந்நாட்களிலே இஸ்ரவேலிலே ராஜா இல்லை. ஒவ்வொருவரும் தங்கள் பார்வைக்குச் சரியாக இருந்ததை செய்தார்கள்” என்று அவர் தம்முடைய புத்தகத்தின் முடிவில் நான்கு தடவை கூறினார். இந்த பின்னணியின் வெளிச்சத்தில், நமது புத்தகம் சாமுவேலின் பிறப்புடன் தொடங்குவதில் ஆச்சரியமில்லை. சாமுவேல் இஸ்ரவேலின் வடக்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த ஒரு லேவியன் ஆவார், அவர் இஸ்ரவேலை அரச யுகத்திற்கு வழிநடத்துவார்.

அரசாட்சிக்கான சாமுவேலின் முன்னுரையை இரண்டு முக்கிய வழிகளில் ஆராய்வோம். முதலில், நமது புத்தகத்தின் இந்த பகுதியின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வதன் மூலம் அதன் அசல் அர்த்தத்தில் கவனம் செலுத்துவோம். பின்னர், இந்த அதிகாரங்களின் கிறிஸ்தவ பயன்பாடு குறித்த சில பிரதிபலிப்புகளை நாம் வழங்குவோம். சாமுவேலின் இந்த முதல் பிரிவின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துடன் ஆரம்பிக்கலாம்.

## அமைப்பும் உள்ளடக்கமும்

நாம் மேலும் செல்வதற்கு முன், இந்த அத்தியாயங்களில் நாம் காணவிருக்கும் முக்கிய கருப்பொருள்களை அறிமுகப்படுத்த இது உதவும். முதலாவதாக, நமது ஆசிரியர் தேவனுடைய ராஜ்யத்தில் கவனம் செலுத்தினார். சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்திருந்ததையும், இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யத்தை வழிநடத்த தாவீதின் வீட்டிற்கு மேடை அமைத்தார் என்பதையும் சாமுவேல் புத்தகத்தின் எழுத்தாளரும் அவருடைய அசல் வாசகரும் அறிந்திருந்தனர். ஆனால், நாம் முன்பு குறிப்பிட்டது போல, நமது புத்தகம் எழுதப்பட்ட நேரத்தில், இஸ்ரவேலில் பலர் தாங்கள் சரியான திசையில் சென்றார்களா என்று கேள்வி எழுப்பினர். பல வருஷங்களாக, தாவீதின் வீட்டார் தேவனுடைய மக்களுக்கு எண்ணற்ற பிரச்சனைகளைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்யும் நோக்கத்திற்காகவே தேவன் தாமே சாமுவேலை எழுப்பினார் என்பதை நம் ஆசிரியர் தனது வாசகர்களுக்கு உறுதியளிக்க காட்டினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த யதார்த்தத்தை மேலும் உறுதிப்படுத்த, அவர் இரண்டாவது முக்கிய கருப்பொருளான மோசேயுடனான தேவனுடைய உடன்படிக்கையின் இயக்கவியலின் மீது கவனத்தை ஈர்த்தார். சாமுவேலின் நாட்களில், சீனாய் மலையில் தேவனுடைய உடன்படிக்கையின் இயக்கவியலால் இஸ்ரவேல் தேவனோடு பிணைக்கப்பட்டிருந்தது. சாமுவேலின் வாழ்நாளில் தேவன் இஸ்ரவேலருக்கு மிகுந்த கருணையைக் காட்டியதை சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் சுட்டிக்காட்டினார். முக்கியமாய், ஆராதனைக்கான மோசேயின் சட்டங்களின் சம்பந்தமாக, நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்ற தேவனுடைய கட்டளையின் மீதும் அவர் கவனத்தை ஒருமுகப்படுத்தினார். வரலாற்றின் இந்த கட்டத்தில் ஆராதனை நடைமுறை அவர்களின் விதியை எவ்வாறு வடிவமைத்தது என்பதை அவர் மீண்டும் மீண்டும் விளக்கினார். இதற்கும் மேலாக, கீழ்ப்படியாமைக்கான சாபங்களையும், ஆராதனைக்கான மோசேயின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்ததற்காக ஆசீர்வாதங்களையும் தேவன் எவ்வாறு ஊற்றினார் என்பதை அவர் சிறப்பித்துக் காட்டினார். இந்த வழிகளில் மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் மீது கவனம் செலுத்துவதன் மூலம், சாமுவேலின் அரசாட்சிக்கான முன்னுரையின் விளைவுகளை ஏற்றுக்கொள்ள நம் ஆசிரியர் தனது அசல் வாசகரை அழைத்தார். சாமுவேல் தொடங்கிய பாதையை இஸ்ரவேல் மக்கள் பின்பற்றியது சரியானது, ஏனென்றால் தேவனே அதை நிறுவினார்.

பெரிய அளவில், அரசாட்சிக்கான சாமுவேலின் முன்னுரையின் அமைப்பும் உள்ளடக்கமும் இரண்டு முக்கிய படிகளைக் குறிக்கின்றன. இது 1 சாமுவேல் 1:1 – 2:11 இல் சாமுவேலின் முந்தைய ஆண்டுகளிலிருந்து தொடங்குகிறது. இது 2:12 – 7:17- இல் ஏலி மற்றும் அவரது குமாரர்களிடமிருந்து சாமுவேலுக்கு லேவிய தலைமையில் மாற்றத்திற்கு நகர்கிறது. சாமுவேலின் ஆரம்ப ஆண்டுகளில், சாமுவேலின் வருகையுடன், தேவன் இஸ்ரவேலுக்கு ஒரு புதிய நாளைத் தொடங்கினார் என்று நமது ஆசிரியர் வெளிப்படுத்தினார்.

## சாமுவேலின் ஆரம்ப ஆண்டுகள் (1 சாமுவேல் 1:1–2:11).

சாமுவேலின் ஆரம்ப ஆண்டுகளைப் பற்றிய விவரம், சாமுவேலின் பிறப்பு மற்றும் சீலோவிலிருந்த ஆசரிப்புக் கூடாரத்தில் தேவனுடைய ஆராதனைக்கு அவரை அர்ப்பணித்ததன் மீது கவனம் செலுத்துகிறது. இந்த ஒற்றை கதை 1 சாமுவேல் 1: 1-28 இல் 2: 11 இல் ஒரு குறுகிய முடிவுடன் தோன்றுகிறது. இந்த விவரிப்பில் உட்பொதிந்திருப்பது 2: 1-10 இல் அன்னாளின் புகழ் பாடலின் நீண்ட விளக்கக்காட்சியாகும்.

**பிறப்பும் அர்ப்பணிப்பும் (1 சாமுவேல் 1:1-28; 2:11).** நாம் முந்தைய பாடத்தில் பார்த்தபடி, சாமுவேலின் பிறப்பு மற்றும் அர்ப்பணிப்பின் கதை அன்னாள் என்ற பெண்ணிலிருந்து தொடங்குகிறது. அன்னாளின் கணவன் எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள் என்பது உங்களுக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நினைவிருக்கும். பெனின்னாளுக்கு நிறைய பிள்ளைகள் இருந்தார்கள், அன்னாள் மலடியாயிருந்தாள். அவர்களுடைய குடும்பம் சீலோவிலுள்ள கூடாரத்தில் வருடாந்திர விருந்துகளில் தவறாமல் கலந்துகொண்டது. இந்த விருந்துகளில், பெனின்னாள் அன்னாளைப் பிள்ளையில்லாமல் இருந்ததற்காக கொடூரமாக ஏளனம் செய்வாள். மேலும், எல்க்கானாவால் அன்னாளின் துயரத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த விருந்துகளில் ஒன்றில், அன்னாள் துக்கத்தில் மூழ்கிப்போனாள், அவள் பின்வாங்கி கர்த்தரை நோக்கி அழுதாள். தேவன் தனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தால், அவனுடைய ஜீவனுள்ள நாளெல்லாம் அவனைக் கர்த்தருடைய சேவைக்குக் கொடுப்பேன் என்று அவள் வாக்குத்தத்தம் செய்தாள். 1:11 இல், ”எந்த சவரக்கத்தியும் அவனது தலையைத் தொடக்கூடாது” என்று அவள் சொன்னாள், அதாவது எண்ணாகமம் 6: 1-21 இலிருந்து தேவனுடைய சேவைக்கு சிறப்பு அர்ப்பணிப்பின் நசரேய பொருத்தனையைப் பின்பற்றுவாள். அன்னாள் ஜெபம் செய்தபோது அவள் மிகுந்த துக்கத்தில் இருப்பதைக் கவனித்த ஆசாரியன் ஏலி, அவள் குடித்திருக்கிறாள் என்று நினைத்துக்கொண்டார். ஆனால் அன்னாள் தான் நிரபராதி என்று சொன்னாள். மேலும், அவளுடைய கதையைக் கேட்ட பிறகு, தேவன் அவளை ஒரு குழந்தையால் கனப்படுத்துவார் என்று ஏலி அவளுக்கு உறுதியளித்தார்.

இந்த சம்பவம் நடந்து கொஞ்ச நாட்களிலேயே, அன்னாள் கர்ப்பவதியாகி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள். அவள் அவனுக்கு சாமுவேல் என்று பெயரிட்டாள். எபிரெய மொழியில் (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) *செமுவேல்* (שְׁמוּאֵל) ஆகும். இந்தப் பெயரின் அர்த்தம் அவனுக்காக தேவனுடைய நாமத்தை அவள் கூப்பிட்டதை சுட்டிக்காட்டுகிறது. ”எல் என்பது நாமமாகும்.” சாமுவேல் பால்மறந்த போது, அன்னாள் தன் பொருத்தனையைக் காப்பாற்றி, கூடாரத்தில் ஏலியின் உதவிக்காரனாக அவனை கர்த்தருடைய சேவைக்கு ஒப்புக்கொடுத்தாள்.

சாமுவேலின் ஆரம்ப ஆண்டுகளின் கதை ஒரு தாழ்மையான லேவிய பெண்ணைப் பற்றிய விவரமாகும், அவள் ஜெபத்திற்கு ஒரு அற்புதமான பதிலைப் பெற்று தேவனுக்கு பக்தியுடன் பதிலளித்தாள். ஆனால், அன்னாளின் சொந்த வாழ்க்கையையும் தாண்டி அவளுடைய அனுபவம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. சாமுவேலின் பிறப்பு மற்றும் அர்ப்பணிப்பு பற்றிய விவரிப்பில், தேவனுக்கு அன்னாள் துதி செலுத்துவதைப் பற்றிய பதிவை வைப்பதன் மூலம் இந்த மாபெரும் முக்கியத்துவத்தை நமது ஆசிரியர் வெளிப்படுத்தினார்.

**அன்னாளின் துதி (1 சாமுவேல் 2:1-10).** தேவனுடைய உடன்படிக்கையின் சாபங்களும் ஆசீர்வாதங்களும் துன்மார்க்கர் மற்றும் தாழ்மையானவர்களின் நிலைமைகளை எவ்வாறு மாற்றியமைத்தன என்பதற்கு அன்னாளின் துதி சிறப்பு கவனம் செலுத்துகிறது. குறிப்பாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அன்னாள் தன் மகனின் பிறப்பு மற்றும் அர்ப்பணிப்பின் மூலம் தேவன் செய்த காரியங்களுக்காக அவரைத் துதித்தாள். தேவனுடைய வல்லமை நமது புத்தகம் முழுவதும் அவ்வளவு முக்கிய பங்கு வகிக்கிறது, அன்னாளின் பாடல் உண்மையில் சாமுவேலின் முழு புத்தகத்திற்கும் ஒரு தோராயமான உள்ளடக்க அட்டவணையை வழங்குகிறது.

> **1 சாமுவேலின் 2 ஆம் அதிகாரத்தில் நாம் காணும் அன்னாளின் பாடல் உண்மையில் முக்கியத்துவம் வாய்ந்தது, இது புத்தகத்தின் மீதமுள்ள பகுதிகளில் என்ன நடக்கிறது என்பதற்கு மேடை அமைக்கிறது. சாமுவேல் புத்தகங்களின் பல முக்கிய கருப்பொருள்கள் இங்கே காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டில் உள்ள மரியாளின் பாடலுடன் அவரது பாடலை ஒப்பிடுவதும் சுவாரஸ்யமானது, அங்கு இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஒரே ஒரு தேவன் மட்டுமே இருக்கிறார் என்பது கவனிக்கப்படுகிறது; கர்த்தர் ஒருவரே. அவர் மட்டுமே நம்மை காப்பாற்ற வல்லவர். அன்னாளின் பாடலில் தோன்றும் மற்றொரு கருப்பொருள், தேவன் சாத்தியமற்றதைப் பயன்படுத்துகிறார், ஏழைகளைப் பயன்படுத்துகிறார், உடைந்தவர்களைப் பயன்படுத்துகிறார், தாழ்த்தப்பட்டவர்களைப் பயன்படுத்துகிறார். அது, நிச்சயமாக, வேதாகமம் முழுவதும் ஓடும் ஒரு கருப்பொருளாகும். தேவனுடைய பெலன் நம்முடைய பலவீனத்தில் வெளிப்படுகிறது. எனவே, தேசத்தின் விடுதலையைக் கொண்டுவர அவளைப் பயன்படுத்தியதற்காக அவள் தேவனைத் துதிக்கும்போது, அந்த யோசனை புத்தகம் முழுவதும் பாய்வதை நாம் காண்கிறோம்.**
>
> **– Dr. ஜான் ஆஸ்வால்ட்**

2:1-10- இல் உள்ள அன்னாளின் துதியின் பதிவை நாம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். சாமுவேலின் ஆரம்ப அதிகாரங்களில் நாம் பார்ப்பதைப் போலவே, அன்னாளின் பாடல் அவளுடைய சொந்த அனுபவத்தில் தேவன் என்ன செய்தார் என்பதிலிருந்து தொடங்குகிறது. ”என் இருதயம் கர்த்தருக்குள் களிகூருகிறது … என் வாய் என் சத்துருக்களைப் பரியாசம்பண்ணுகிறது என்று 1 வது வசனத்தில் அவள் கூறினாள். தேவன் தன்னுடைய சூழ்நிலையை எப்படி மாற்றியமைத்திருக்கிறார் என்பதை அன்னாள் தன் கண்களால் பார்த்திருந்தாள். சீலோவில் தேவனை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நேர்மையற்ற முறையில் ஆராதித்ததால் அவள் பெனின்னாளை வெட்கத்தால் சபித்தாள். அன்னாளின் உண்மையுள்ள ஆராதனையின் காரணமாக ஒரு குழந்தையின் மூலம் உண்டாகும் மகிழ்ச்சியினால் அவர் அவளை ஆசீர்வதித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து, நமது புத்தகத்தின் அடுத்த பல அத்தியாயங்களைப் போலவே, அன்னாளின் பாடல் அவளுடைய தனிப்பட்ட அனுபவத்தைத் தாண்டி பொதுவாக இஸ்ரவேல் தேசத்திற்கு விரிவடைகிறது. 2-8 வசனங்களில், தேவன் சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் பரந்த அளவில் ஊற்றியதால் பலரின் சூழ்நிலைகளை மாற்றியமைப்பார் என்ற நம்பிக்கையை அன்னாள் வெளிப்படுத்தினார். 1 சாமுவேல் 2:7-8 இல் அன்னாளின் வார்த்தைகளைக் கவனிக்கவும்:

> **கர்த்தர் தரித்திரம் அடையச்செய்கிறவரும், ஐசுவரியம் அடையப்பண்ணுகிறவருமாயிருக்கிறார்; அவர் தாழ்த்துகிறவரும், உயர்த்துகிறவருமானவர். அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து எடுத்து, எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார்; அவர்களைப் பிரபுக்களோடே உட்காரவும், மகிமையுள்ள சிங்காசனத்தைச் சுதந்தரிக்கவும் பண்ணுகிறார் (1 சாமுவேல் 2:7-8).**

தேவனுடைய பராமரிப்பின் இந்த பரந்த முறை இஸ்ரவேலின் தலைமையில் வரவிருக்கும் மாற்றங்களை எதிர்பார்த்தது. இந்தப் பாடத்தில் நாம் பார்க்கப்போகும் வண்ணம், ஏலியின் குடும்பத்தாரை தேவன் சபித்தார், சாமுவேலை ஆசீர்வதித்தார். பின்னர், தேவன் சவுலையும் அவரது வீட்டாரையும் சபித்து, தாவீதையும் அவரது வம்சத்தையும் ஆசீர்வதித்தார்.

கடைசியாக, நம்முடைய புத்தகத்தின் கடைசி பெரிய பகுதி தாவீதின் நிலைத்திருக்கும் அரசதிகாரத்தின் மீது கவனத்தை ஒருமுகப்படுத்துவதைப் போலவே, அன்னாளின் முடிவான துதி தேவனுடைய மகிமையான ராஜ்யத்தையும் ராஜாவையும் எதிர்நோக்குகிறது. 9-10 வசனங்களில், தேவனின் மாற்றியமைக்கும் சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் மாற்றியமைப்பது ஒரு நாள் இஸ்ரவேலில் ஒரு ராஜா வருவதற்கு வழிவகுக்கும், அவர் தேவனுடைய எதிரிகள் அனைவரையும் வெல்வார் என்ற தனது உறுதியை அன்னாள் வெளிப்படுத்தினாள். 10 வது வசனத்தில் அவள் சொன்ன விதத்தை கவனிக்கவும்:

> **கர்த்தரோடே வழக்காடுகிறவர்கள் நொறுக்கப்படுவார்கள்; வானத்திலிருந்து அவர்கள்மேல் முழங்குவார். கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்த்து, தாம்**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> **ஏற்படுத்தின ராஜாவுக்குப் பெலன் அளித்து, தாம் அபிஷேகம்பண்ணினவரின் கொம்பை உயரப்பண்ணுவார் (1 சாமுவேல் 2:10).**

அன்னாளின் காலத்தில், இஸ்ரவேலர்கள் பல வருஷங்களாக எதிரிகளிடம் தோல்வியை அனுபவித்தார்கள். ஆனால் இங்கே, ”கர்த்தருடைய சத்துருக்கள்” மீது தேவனுடைய சாபங்கள் வரும் என்று அன்னாள் தைரியமாக அறிவித்தாள். அவர்கள் ”நொறுக்கப்படுவார்கள்,” ”கர்த்தர் பூமியின் கடையாந்தரங்களை நியாயந்தீர்ப்பார்.” உலகெங்கிலும் உள்ள தனது எதிரிகள் அனைவருக்கும் நித்திய சாபங்களை விதிக்கும் நாளை நோக்கி தேவன் வரலாற்றை நகர்த்துகிறார் என்று அன்னாள் உறுதியாக நம்பினாள்.

ஆனால் இஸ்ரவேலின் ராஜாவுக்கு தேவனுடைய ஆசீர்வாதங்கள் மூலம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்பதை அன்னாளின் கடைசி வார்த்தைகள் வெளிப்படுத்துகின்றன என்பதைக் கவனிக்கவும். 10 வது வசனத்தின் முடிவில் அவள் சொன்னது போல், ”கர்த்தர் … தம்முடைய ராஜாவுக்குப் பெலன் கொடுத்து, தாம் அபிஷேகம்பண்ணினவருடைய கொம்பை உயர்த்துவார். இஸ்ரவேலின் எதிர்கால ராஜாவை பலத்தாலும் வெற்றியாலும் ஆசீர்வதிப்பதன் மூலம் தேவன் பூமியின் எல்லைகளை நியாயந்தீர்ப்பார் என்று அன்னாள் உறுதியளித்தாள்.

துரதிர்ஷ்டவசமாக, அன்னாளின் இறுதி வார்த்தைகளின் முக்கியத்துவத்தை பல அறிஞர்கள் குறைத்து மதிப்பிடுகிறார்கள். 1 சாமுவேல் 8 இல், இஸ்ரவேலர்கள் தங்களை ஆள ஒரு ராஜாவை தேவனிடம் கேட்டார்கள் என்பது சாமுவேல் புத்தகத்தை அறிந்த அனைவருக்கும் தெரியும். தேவன் சாமுவேலிடம் 7 ஆம் வசனத்தில், ”அவர்கள் உன்னை மறுதலிக்கவில்லை, ஆனால் அவர்கள் மீது ராஜாவாக இருக்காதபடிக்கு என்னை நிராகரித்தார்கள்” என்று பதிலளித்தார். பெரும்பாலும், இந்த வார்த்தைகள் இஸ்ரவேல் எந்த சூழ்நிலையிலும், எந்த வகையான மனித ராஜாவையும் கொண்டிருப்பதை தேவன் ஒருபோதும் விரும்பவில்லை என்பதை அர்த்தப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஆனால் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. பிரச்சனை இஸ்ரவேல் ஒரு மனித ராஜாவை விரும்பியது அல்ல. மாறாக, இஸ்ரவேலர்கள் தங்களைச் சுற்றியுள்ள ”எல்லா [புறமத] ஜாதிகளைப் போலவும் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த நேரத்தில் ஒரு ராஜாவை மட்டுமே விரும்பினார்கள் என்று 20-வது வசனம் நமக்குச் சொல்கிறது. அவர்களுடைய உண்மைத் தவறுதலும் தேவனுடைய நேரத்துக்காகக் காத்திருக்க மறுத்ததும்தான் அவர்களுடைய தவறு, ஒரு ராஜாவுக்கான அவர்களுடைய வேண்டுகோள் தவறல்ல. உண்மையில், இஸ்ரவேல் ராஜ்யத்திற்கான தேவனுடைய நோக்கங்களுக்கு சேவை செய்யும் எதிர்கால ராஜாவைக் குறித்த அன்னாளின் உற்சாகம் உண்மையில் தேவனிடமிருந்து அவருடைய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மக்களுக்கு முந்தைய வெளிப்பாடுகளின் நிலையான போதனைகளை பிரதிபலித்தது.

ஒரு சில உதாரணங்களைக் குறிப்பிட, ஆதியாகமம் 17:6 இல், "உன்னிடமிருந்து ராஜாக்கள் வருவார்கள்" என்ற வாக்குறுதியுடன் தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்தார். ஆதியாகமம் 35:11 இல், "உன் சரீரத்திலிருந்து ராஜாக்கள் வருவார்கள்" என்று தேவன் யாக்கோபுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். இதற்கும் மேலாக, ஆதியாகமம் 49:10 இல், அரச "செங்கோல் யூதாவை விட்டு நீங்காது" என்று யாக்கோபு முன்னுரைத்தார். உபாகமம் 17:14-20 இல், ராஜாவுக்கான விதிமுறைகளை வழங்குவதன் மூலம் இஸ்ரவேலில் ராஜாக்கள் நிறுவப்படுவார்கள் என்று தேவன் எதிர்பார்த்தார் என்பதை நாம் சேர்க்க வேண்டும். கூடுதலாக, நியாயாதிபதிகள் 21: 25, மற்றும் பல பகுதிகள், நியாயாதிபதிகளின் காலத்தின் பிரச்சனைகள் "இஸ்ரவேலில் ராஜா இல்லை" என்பதால் விளைந்தன என்று குறிப்பிடுகின்றன. சாமுவேல் புத்தகத்தில் இஸ்ரவேலின் ராஜா மீது தனக்கு இருந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தியது அன்னாள் மட்டுமல்ல. தேவன் ஒரு ஆசாரியனை எழுப்புவார், அவர் "[தேவனால்] அபிஷேகம் பண்ணப்பட்ட [ராஜா] முன்பு என்றென்றைக்கும் உள்ளேயும் வெளியேயும் செல்வார்" என்று 1 சாமுவேல் 2:35 இல், இஸ்ரவேலில் ஒரு தீர்க்கதரிசி ஏலிக்கு அறிவித்தார்.

இந்த வசனங்களின் வெளிச்சத்தில், சாமுவேலின் அற்புதமான பிறப்பு, இஸ்ரவேலின் பூர்வகால விசுவாசக் கோட்பாட்டில் அன்னாளின் நம்பிக்கையைப் புதுப்பித்தது என்பதை நாம் காணலாம். ஒரு நாள், இஸ்ரவேலின் ஒரு பெரிய ராஜாவின் மூலம் தேவன் தம்முடைய ராஜ்யத்தை முழு உலகத்திற்கும் விரிவுபடுத்துவார் என்பதை அவள் அறிந்திருந்தாள். சாமுவேல் பிறந்ததும், இஸ்ரவேலர்களை தேவன் அந்த நாளுக்கு நெருக்கமாக நகர்த்துகிறார் என்பதை அன்னாள் உறுதியாக நம்பினாள்.

சாமுவேலின் ஆரம்ப ஆண்டுகளின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தைப் பார்த்த பிறகு, சாமுவேலின் அரசாட்சிக்கான முன்னுரையின் இரண்டாம் பகுதியான 2:12–7:17- இல் இஸ்ரவேலின் லேவிய தலைமையில் ஏற்பட்ட மாற்றம் என்பதற்கு திரும்புவோம்.

## தலைமைத்துவத்தில் மாற்றம் (1 சாமுவேல் 2:12–7:17).

சீலோவில் தேவனுடைய ஆராதனைக்கு சாமுவேலை அன்னாள் அர்ப்பணித்தபோது, ஏலியும் அவருடைய குமாரர்களும் இஸ்ரவேலின் வல்லமை வாய்ந்த லேவிய அதிகாரிகளாக இருந்தார்கள். ஆனால் பல ஆண்டுகளாக, முற்றிலும் எதிர்பாராத ஒன்று நடந்தது. ஏலிக்கும் அவருடைய குமாரர்களுக்கும் பதிலாக சாமுவேல் பதவி ஏற்றார். இந்த மாற்றம் இஸ்ரவேலில் அரசாட்சியை நிறுவுவதற்கு இன்றியமையாததாக இருந்தது. உண்மையில், மோசேயுடனான தனது உடன்படிக்கையின் சாபங்களையும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆசீர்வாதங்களையும் செயல்படுத்துவதன் மூலம் தேவனே இந்த நிகழ்வுகளைக் கொண்டு வந்தார் என்பதை விளக்க வேண்டிய அவசியத்தை நமது ஆசிரியர் உணர்ந்தார். ஆராதனை சம்பந்தமாக மோசேயின் சட்டங்களை ஏலியும் அவருடைய குமாரர்களும் அப்பட்டமாக மீறியதால் தேவனுடைய சாபங்களுக்கு ஆளானார்கள். மோசேயின் திருச்சட்டத்தில் ஆராதனை செய்வதற்கான கட்டளைகளை உண்மையுடன் கடைப்பிடித்ததால் சாமுவேல் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றார்.

சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் ஏலியின் குடும்பத்திற்கும் சாமுவேலுக்கும் இடையிலான நான்கு முரண்பாடுகளுடன் தலைமைத்துவத்தில் இந்த மாற்றத்தை விளக்கினார். முதலாவதாக, 1 சாமுவேல் 2:12-21 இல் ஏலியின் குமாரர்களின் ஆராதனையையும் சாமுவேலின் ஆராதனையையும் பற்றிய தெய்வீக மதிப்பீடுகளை அவர் வேறுபடுத்தினார். இரண்டாவதாக, 1 சாமுவேல் 2:22-26 இல் ஏலியின் குடும்பத்தையும் சாமுவேலையும் பற்றிய தெய்வீக மற்றும் பொது மதிப்பீடுகளை அவர் வேறுபடுத்தினார். மூன்றாவதாக, 2:27-4:1 இல் சாமுவேலுக்கு தேவன் அளித்த பதில்களையும், ஏலிக்கு தேவன் அளித்த பதில்களையும் அவர் வேறுபடுத்திப் பார்த்தார். நான்காவதாக, பெலிஸ்தருடனான இஸ்ரவேலின் மோதல்களைக் குறித்து ஏலியின் குடும்பத்திற்கும் சாமுவேலுக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் காண்கிறோம், இது 4:1ஆ-7:17 வரை தொடங்குகிறது.

**தெய்வீக மதிப்பீடுகள் (1 சாமுவேல் 2:12-21).** தெய்வீக மதிப்பீடுகளின் ஒப்பீடு முதலில் 12-17 வசனங்களில் ஏலியின் குமாரர்களுக்கு மாறி, திடீர், திட்டவட்டமான கண்டனத்துடன் தொடங்குகிறது. 12 ஆம் வசனத்தில் நாம் வாசிக்கிறபடி, "ஏலியின் குமாரர் பேலியாளின் மனுஷராயிருந்தார்கள். அவர்கள் கர்த்தரை அறியவில்லை" என்றனர். இந்தக் கண்ணோட்டத்திற்கு அவர் ஏன் வந்தார் என்பதை நமது ஆசிரியர் பின்னர் விளக்கினார். ஏலியின் குமாரர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி பலிசெலுத்தப்பட்ட இறைச்சியில் தங்கள் பங்கை எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக, தங்களுக்கு ஏற்ற மிகச் சிறந்த இறைச்சியைத் தங்களுக்கு முன்கூட்டியே தேர்ந்தெடுத்தார்கள். யாராவது ஆட்சேபித்தால், சிறந்த பகுதிகளை வலுக்கட்டாயமாக எடுத்துக் கொள்வதாக அவர்கள் அச்சுறுத்தினர். சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் இந்த ஆராதனை மீறல்களைப் பற்றிய தேவனுடைய மதிப்பீட்டை வெளிப்படுத்தினார். "வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது, மனுஷர் கர்த்தருடைய காணிக்கையை வெறுப்பாய் எண்ணினார்கள்" என்று 17 வது வசனத்தில் அவர் எழுதினார்.

ஆனால் இந்த கணக்கைத் தொடர்ந்து உடனடியாக, நமது ஆசிரியர் 2:18-21 இல் சாமுவேலை பற்றிய தேவனுடைய வித்தியாசமான மதிப்பீட்டிற்கு திரும்பினார். அன்னாள் வருஷா வருஷம் திரும்பி வந்து, சாமுவேலுக்கு ஒரு புதிய ஏபோத்தை, அதாவது ஒரு தாழ்மையான ஆடையைக் கொண்டுவந்ததன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மூலம் தேவன் மீது தனக்குள்ள பக்தியைக் காட்டியதை முதலில் அவர் விவரித்தார். தேவன் தொடர்ந்து அன்னாளை ஆசீர்வதித்தார், அவளுக்கு இன்னும் மூன்று மகன்களையும் இரண்டு மகள்களையும் கொடுத்தார். பின்னர், 2:21 இந்த வார்த்தைகளுடன் முடிகிறது:

> **சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் கர்த்தருடைய சந்நிதியில் வளர்ந்தான் (1 சாமுவேல் 2:21).**

ஏலியின் குமாரர்களை தேவன் கடுமையாக கண்டனம் செய்ததற்கு நேர்மாறாக சாமுவேலை தேவன் தொடர்ந்து அங்கீகரித்தார்.

**தெய்வீக மற்றும் பொது மதிப்பீடுகள் (1 சாமுவேல் 2:22-26).** அடுத்து, 1 சாமுவேல் 2:22-26 ல் ஏலியின் குடும்பம் மற்றும் சாமுவேலின் தெய்வீக மற்றும் பொது மதிப்பீடுகளை நமது ஆசிரியர் வேறுபடுத்தினார். ஒருபுறம், 22-25 வசனங்களில், ஏலியின் குமாரர்கள், கானானிய கருவுறுதல் சடங்குகளால் ஈர்க்கப்பட்டு, கூடார நுழைவாயிலில் சேவை செய்த பெண்களுடன் உடலுறவு கொண்டிருந்தனர் என்று நாம் அறிகிறோம். மற்றும் 24 வது வசனம் ஏலி "கர்த்தரின் மக்கள்" என்று அழைத்த உண்மையுள்ள இஸ்ரவேலர் அவரது மகன்களைக் குறித்து முறையிட்டனர் என்று குறிப்பிடுகிறது. ஏலி தன் குமாரர்கள் அவ்விதமாக தொடர்ந்தால், அவர்களுக்கு உதவ யாராலும் முடியாது என்று கடுமையாக எச்சரித்தார். ஆனால் அவர்கள் தங்கள் தந்தையின் கண்டனத்தைப் புறக்கணித்தனர். "[ஏலியின் குமாரர்கள்] தகப்பன் சொல்லைக் கேளாமல் போனார்கள்; அவர்களை சங்கரிக்க கர்த்தர் சித்தமாயிருந்தார்" என்றும் வசனம் 25 கூறுகிறது.

ஏலியின் குமாரர்களைப் பற்றிய இந்த எதிர்மறையான தெய்வீக மற்றும் பொது மதிப்பீடுகளை அறிக்கையிட்ட பிறகு, சாமுவேலின் சேவையை வேறுபடுத்தும் ஒரு சுருக்கமான குறிப்பை நாம் காண்கிறோம். தேவனும் இஸ்ரவேல் மக்களும் சாமுவேலுக்கு எவ்வாறு பதிலளித்தார்கள் என்பதைக் கவனிப்பதன் மூலம் 21 வது வசனத்திலிருந்து சாமுவேலைப் பற்றிய தனது முந்தைய நேர்மறையான கருத்தை நமது ஆசிரியர் விரிவுபடுத்தினார். 1 சாமுவேல் 2:26 இல் நாம் இதை வாசிக்கிறோம்:

> **சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான் (1 சாமுவேல் 2:26).**

இந்த வசனம் நமக்குச் சொல்கிறபடி, தேவனும் இஸ்ரவேலின் உண்மையுள்ள மக்களும் சாமுவேலின் லேவிய சேவையை அங்கீகரித்தனர்.

**தேவனுடைய பதில்கள் (1 சாமுவேல் 2:27–4:1).** அந்த மாறுபட்ட மதிப்பீடுகளைத் தொடர்ந்து, ஏலி மற்றும் அவரது குடும்பத்தின் விசுவாசமற்ற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சேவைக்கு தேவனுடைய பதில்களை 2:27–4:1 இல் சாமுவேலின் உண்மையுள்ள சேவைக்கு அவர் அளித்த பதிலுடன் நமது ஆசிரியர் ஒப்பிட்டார்.

ஒருபுறம், நமது ஆசிரியர் 2:27-36 இல் ஏலியைக் கையாண்டார். பெயரிடப்படாத ஒரு தீர்க்கதரிசியை, "தேவனுடைய மனுஷனை" தேவன் அனுப்பினார் என்று அவர் விளக்கினார். ஏலியும் அவருடைய குமாரர்களும் இஸ்ரவேலின் ஆராதனையைக் கறைப்படுத்தியதைச் சுட்டிக்காட்டினார். இந்த தீர்க்கதரிசியின் மூலம், தேவன் ஏலியின் குடும்பத்திற்கு எதிராக சாபங்களை அச்சுறுத்தினார், 31 வது வசனத்தில், உன் வீட்டில் ஒரு கிழவனும் இராதபடிக்கு உன் புயத்தையும் உன் பிதாவின் வீட்டாருடைய புயத்தையும் அழிப்பேன் என்றார். தேவன் ஏலியின் குடும்பத்தை நிராகரித்து, தம்முடைய சேவையிலிருந்து அவர்களை நீக்கினார்.

மறுபுறம், சாமுவேலுக்கு தேவன் கொடுத்த மாறுபட்ட பதிலை 3:1-4:1 இல் நமது ஆசிரியர் அறிவித்தார். தேவன் சாமுவேலிடம் நேரடியாக பேசப்போகிறார் என்பது எவ்வளவு குறிப்பிடத்தக்கது என்பதைக் குறிக்க இந்த நேரத்தில் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலம் அரிதாகவே பேசினார் என்பதை அவர் முதலில் குறிப்பிட்டார். பின்னர், இரவில் பல முறை சாமுவேலை எழுப்பிய பிறகு, தேவன் 11 வது வசனத்தில் அவர் மிகவும் அதிர்ச்சியூட்டும் ஒன்றைச் செய்யப் போகிறார் என்று வெளிப்படுத்தினார், "அதைக் கேட்கும் அனைவரின் காதுகளும் கூசும்." ஏலியின் வீட்டார் செய்த பாவங்களை இனிமேலும் பொறுத்துக்கொள்ள மாட்டேன் என்றும், அவர்களுடைய பொல்லாங்குக்காக அவர்களை என்றென்றும் தண்டிக்கப் போவதாகவும் சாமுவேலிடம் சொன்னார். காலையில், சாமுவேல் ஏலியிடம் குடும்பத்தாரைச் சபிக்கப்போவதாக தேவன் பயமுறுத்துகிறார் என்று சொன்னார். முரண்பாடாக, தேவன் தான் அதிகாரம் படைத்தவர் என்றும், அவர் சரியானதைச் செய்வார் என்றும் ஏலியே ஒப்புக்கொண்டார். நமது ஆசிரியர் இந்த முரண்பாட்டை, 1 சாமுவேல் 3:19-20 இல், இந்த வார்த்தைகளுடன் முடித்தார்:

> **சாமுவேல் வளர்ந்தான், கர்த்தர் அவனோடேகூட இருந்தார், அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்துபோக விடவில்லை. சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி என்று தாண் துவக்கிப் பெயெர்செபாமட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது (1 சாமுவேல் 3:19-20)**

2: 21,26 முதல் சாமுவேலின் ஒப்புதலை நமது ஆசிரியர் விரிவுபடுத்தியதை இங்கே கவனிக்கவும். சாமுவேல் வளர வளர, "கர்த்தர் அவனோடு இருந்தார்." சாமுவேல் கூடாரத்தில் தேவனுக்கு உண்மையாய் சேவகம் செய்தபடியால், தேவன் அவனை ஆசீர்வதித்து, சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாகவும் அவனைத் தம்முடைய தீர்க்கதரிசியாக எழுப்பினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**பெலிஸ்தருடனான மோதல்கள் (1 சாமுவேல் 4:1b–7:17)** ஏலியின் குடும்பத்திற்கும் சாமுவேலுக்கும் இடையிலான முரண்பாடுகள் 4:1b–7:17–ல் பெலிஸ்தியருடன் இஸ்ரவேலர் கொண்டிருந்த மோதல்களைப் பற்றிய ஒரு நீண்ட விவரிப்பில் முடிவடைகின்றன. இந்த இறுதிப் பகுதி மூன்று அத்தியாயங்களாக உடைகிறது, இது ஏலியின் குடும்பத்தின் மீது தேவனுடைய சாபங்கள் எவ்வாறு பெலிஸ்தருக்கு முன்பு இஸ்ரவேலின் தோல்விக்கு வழிவகுத்தது என்பதில் கவனத்தை ஈர்க்கிறது. இதற்கு நேர்மாறாக, சாமுவேல் மீது தேவனுடைய ஆசீர்வாதங்கள் பெலிஸ்தர்கள் மீது இஸ்ரவேலின் வெற்றிக்கு வழிவகுத்தது.

இந்த விவரிப்பின் முதல் அத்தியாயம் 4:1b-22 இல் தொடங்குகிறது. ஏலியின் குடும்பத்தார் செய்த பாவங்களே பெலிஸ்தருடனான போரில் இஸ்ரவேலர் தோற்கடிக்கப்படுவதற்கு வழிநடத்தின என்பதை இங்கே காண்கிறோம். ஏலியின் குமாரர்கள் தேவனுடைய பெட்டியை யுத்தத்திற்கு எடுத்துச் செல்வதன் மூலம் பக்தியுள்ளவர்கள் போல் நடித்தனர், ஆனால் அவர்கள் அந்தப் பெட்டியை வெற்றிக்கான ஒரு தாயத்தாக மட்டுமே கருதினர். கூடுதலாக, பல ஆண்டுகளாக அவர்களின் பாவங்கள் மிகவும் பெரிதாகிவிட்டன, பெலிஸ்தர் இஸ்ரவேலை முறியடித்தது மட்டுமல்லாமல், தேவனுடைய பெட்டியையும் கைப்பற்றினர். ஏலியின் இரண்டு குமாரர்களும் போரில் மடிந்தனர். அவர்கள் இறந்ததையும் தேவனுடைய பெட்டி கைப்பற்றப்பட்டதையும் கேள்விப்பட்ட பிறகு ஏலியும் இறந்துபோனார். ஆனால் அதற்கும் மேலாக, ஏலியின் குடும்பத்தார் செய்த பாவங்கள் இஸ்ரவேல் தேசம் முழுவதின் மீதும் தேவனுடைய சாபத்தைக் கொண்டுவந்தது. 4:21 இல், ஏலியின் விதவை மருமகள் தனது புதிதாகப் பிறந்த மகனுக்கு எபிரேய மொழியில் ”மகிமை இல்லை” அல்லது ”மகிமை எங்கே?” என்று பொருள்படும் ”இக்கபோத்” (*אִי־כָבוֹד*) என்று பெயரிட்டாள். 22 வது வசனத்தில் அவள் விளக்கியது போல், ”மகிமை இஸ்ரவேலை விட்டு அகன்றது, ஏனென்றால் தேவனுடைய பெட்டி கைப்பற்றப்பட்டது.” ஏலியும் அவருடைய குமாரர்களும் செய்த பாவங்கள் தேசத்தின் மீது இந்தப் பயங்கரமான சாபத்தைக் கொண்டுவந்தன.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து, 5:1–7:2 இல் தேவனுடைய தலையீட்டைப் பற்றி வாசிக்கிறோம். பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை அஸ்தோத் கோவிலுக்குள் இருந்த தங்கள் தேவனான தாகோனின் சிலைக்கு முன்பாக வைத்து இஸ்ரவேல் மீது தாங்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாடினர். ஆனால் தேவன் குறுக்கிட்டார். முதலாம் நாள் இரவுக்குப் பிறகு, கர்த்தருடைய பெட்டிக்கு முன்பாக தரையில் முகம் குப்புறக் கிடந்த தாகோனின் சிலையை பெலிஸ்தர் கண்டார்கள். இரண்டாவது இரவுக்குப் பிறகு, பெலிஸ்தர் தாகோனை மறுபடியும் முகம் குப்புறப் பார்த்தார்கள். ஆனால் இந்த முறை, பூர்வ மனித சேனைகள் அடிக்கடி தோற்கடிக்கப்பட்ட எதிரிகளின் தலைகளையும் கைகளையும் அகற்றியதைப் போலவே, தாகோனின் தலையும் கைகளும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

துண்டிக்கப்பட்டிருந்தன. கர்த்தர் அஸ்தோத் மக்களை கட்டிகளாலும், கொறித்துண்ணிகளால் பரவிய வாதையாலும் துன்புறுத்தினார். பெலிஸ்தர் தேவனுடைய பெட்டியை காத் மற்றும் எக்ரோன் நகரங்களுக்கு நகர்த்தியபோது அவர் அவ்வாறே செய்தார். ஏழு மாதங்களுக்குப் பிறகு, பெலிஸ்தர்கள் தங்கள் குருமார்களிடமும் குறிசொல்பவர்களிடமும் கலந்தாலோசித்தார்கள். பசுக்கள் இழுத்த வண்டியில் பேழையைத் திருப்பித் தருமாறு அவர்கள் அறிவுறுத்தினர். இது அவர்களின் கருவுறுதல் மதத்தின் அடையாளமாகும். மேலும், அவர்கள் குற்ற பலியாக அவர்கள் பெலிஸ்தரின் ஐந்து நகரங்களில் சார்பாக ஐந்து தங்க கட்டிகள் மற்றும் ஐந்து தங்க எலிகளை அனுப்ப பரிந்துரைத்தனர்.

> பெலிஸ்தர் பெட்டி வெளியே வருவதைப் பார்க்கும்போது, அவர்கள் உண்மையில் பயப்படுகிறார்கள். ”ஆ, எகிப்துக்கு விரோதமாக அந்த வாதைகள் அனைத்தையும் வரப்பண்ணி, அவர்களை எகிப்திலிருந்து விடுவித்த கர்த்தரின் பெட்டி இதுவே” என்று அவர்கள் கூறுகின்றனர். உண்மையில், பெலிஸ்தர்கள் சொல்வது சரிதான். ஆனால் பெலிஸ்தரோ, ”சரி, நாம் மேலே சென்று அவர்களுடன் சண்டையிட முயற்சிப்போம்” என்று கூறுகிறார்கள். எனவே இது பெரிய யாத்திரையைக் கொண்டுவந்த தேவனுடைய பெட்டி என்று பெலிஸ்தர் பயந்தது சரிதான். ஆனால் வாசகர்களாகிய நாம் அறிவது என்னவென்றால், யாத்திராகமத்தை ஏற்படுத்திய தேவன் தனது சொந்த மக்களுடைய செயல்களில் மகிழ்ச்சியாக இல்லாமல் இருந்தார். எனவே, பெலிஸ்தர் இஸ்ரவேலரை தோற்கடித்து பெட்டியைக் கைப்பற்ற முடிந்தது... ஒருவேளை அந்த உடன்படிக்கைப் பெட்டி உண்மையில் இந்த யாத்திராகமத்தை கொண்டுவரக்கூடிய இந்த பெரிய பெரிய தேவனுடன் இணைக்கப்படவில்லை.” ஆனால், உண்மையில், அது எதிர்மாறாக இருப்பதை நாம் காண்கிறோம். ஆம், அந்தப் பெட்டியைக் கைப்பற்றுவதற்கு தேவன் அனுமதித்திருக்கிறார். ஆனால், இந்தப் பெட்டி பெலிஸ்தரின் எல்லைக்குள் நுழைந்தவுடனேயே என்ன நடக்கிறது என்று ஊகிக்க முடிகிறதா? எகிப்தியர்கள் அனுபவித்த வாதைகளை பெலிஸ்தர் அனுபவிக்க ஆரம்பிக்கிறார்கள். எனவே, நாம் காண்பது என்னவென்றால், பெலிஸ்தர் பெட்டியைக் கைப்பற்றியது யாத்திராகமம் புத்தகத்தில் தேவன் செயல்பட்ட விதத்தை நினைவூட்டுகிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**– ஆண்ட்ரூ அபெர்னெத்தி, Ph.D.**

லேவிய நகரமான பெத்ஷிமேசில் இருந்த இஸ்ரவேலர்களிடம் பசுக்கள் அந்தப் பெட்டியைக் கொண்டு வந்தன. ஆனால், வருத்தகரமாக, பெத்ஷிமேஷிலிருந்த லேவியரும்கூட தேவனுடைய ஆராதனை சட்டங்களை மீறினார்கள். மோசேயின் சட்டத்திற்கு முரணாக, அவர்கள் பெலிஸ்தனின் பொன் கட்டிகளையும் சுண்டெலிகளையும் பேழையின் முன்னிலையில் வைத்திருந்தனர். பயபக்தியுடன் பேழையை மூடுவதற்குப் பதிலாக, அவர்கள் அதைப் பார்த்தார்கள். அதன் விளைவாக, தேவன் பெத்ஷிமேஷில் 70 பேரைக் கொன்றார், ஜனங்கள் புலம்பினார்கள். பின்பு இஸ்ரவேலர் அந்தப் பெட்டியைப் பாதுகாப்பாக வைப்பதற்காக கீரியாத்யாரீமுக்குக் கொண்டுபோனார்கள். பேழை திரும்பி வந்திருந்தாலும், 7:2 முழு இஸ்ரவேல் தேசமும் இந்த நேரத்தில் தேவனுடைய சாபங்களின் கீழ் தொடர்ந்து துன்பப்படுகிறார்கள் என்ற உண்மையை வலியுறுத்துகிறது. அநேககாலம் சென்றபின்பு, ஏறக்குறைய இருபது வருஷம் சென்றபின்பு,

> **இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் கர்த்தரை நோக்கிப் புலம்பினார்கள் என்று நாம் வாசிக்கிறோம் (1 சாமுவேல் 7:2).**

அடுத்த அத்தியாயத்தில், 7:3-17 இல் பெலிஸ்தரை இஸ்ரவேல் வெற்றி கொண்டதை அறிகிறோம். நாம் எதிர்பார்த்தபடியே, சாமுவேலின் உண்மையுள்ள சேவையை இந்த வெற்றிக்குக் காரணம் என்று நம் நூலாசிரியர் சிறப்பித்துக் காட்டுகிறார். சாமுவேல் முதலில் இஸ்ரவேல் மக்களிடம் தங்கள் அந்நிய தெய்வங்களை விட்டுவிட்டு ஆண்டவரிடம் திரும்புமாறு மன்றாடினார். அவர்கள் தங்கள் இருதயங்களை கர்த்தருக்கு நேராக செலுத்தி, அவரை மட்டுமே சேவித்தால், தேவன் அவர்களை பெலிஸ்தரிடமிருந்து விடுவிப்பார் என்று அவர் அறிவித்தார். இஸ்ரவேலர் தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தி, மோசேயின் ஆராதனை விதிமுறைகளை மீறியதற்காக மனந்திரும்பினார்கள். எனவே, சாமுவேல் அவர்கள் சார்பாக கர்த்தரிடம் ஜெபித்தார். பெலிஸ்தர்கள் போருக்குத் திரண்டபோது, மக்கள் சாமுவேலை நோக்கிக் கூச்சலிட்டார்கள். மோசேயின் சட்டத்தின்படி சாமுவேல் பலிகளைச் செலுத்தினார். பெலிஸ்தர்கள் மீது இஸ்ரவேல் தேசத்துக்கு தேவன் வெற்றி கொடுத்தார். "கர்த்தருடைய கை சாமுவேலின் எல்லா நாட்களிலும் பெலிஸ்தருக்கு விரோதமாக இருந்தது" என்று 7:13 இல் நாம் வாசிக்கிறோம். சாமுவேல் தன் சொந்த ஊரான ராமாவுக்குத் திரும்பி வந்து, அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டியபோது, அவனுடைய உண்மையுள்ள ஆராதனை இஸ்ரவேலுக்கு தொடர்ந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுத் தந்தது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

லேவிய தலைமையில் இஸ்ரவேலின் மாற்றத்தின் இந்த இறுதி பகுதி, ஏலியின் குடும்பத்திலிருந்து சாமுவேலுக்கு லேவிய அதிகாரம் மாற்றப்படுவதைப் பற்றிய எந்தவொரு கேள்வியையும் தீர்த்தது. ஏலியின் குடும்பத்தார் தேவனை ஆராதிப்பதை அவமதித்ததால் அவர்கள் மீது தேவன் கொடுத்த சாபங்கள் இஸ்ரவேல் தேசம் முழுவதையும் தோல்வியில் தள்ளியது. ஆனால் கர்த்தருக்கு முன்பாக ஆராதனையில் உண்மையாக சேவை செய்ததற்காக சாமுவேல் மீது தேவன் கொடுத்த ஆசீர்வாதங்கள் இஸ்ரவேலை வெற்றிக்கு வழிநடத்தின. தேவன் தாமே சாமுவேலை எழுப்பியிருந்தார், அவர் இஸ்ரவேலை அரச பதவியில் அறிமுகப்படுத்தினார், இன்னும் குறிப்பாக, தாவீதை ராஜாவாக அறிமுகப்படுத்தினார்.

அரசதிகாரத்திற்கான சாமுவேலின் முன்னுரையின் அமைப்பையும் பொருளடக்கத்தையும் ஆராய்ந்த பிறகு, நம்முடைய புத்தகத்தின் இந்தப் பகுதியின் கிறிஸ்தவ பயன்பாட்டிற்கு ஒரு கணம் திரும்ப வேண்டும். இந்த அதிகாரங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களின் வாழ்க்கையில் எப்படி உதவ வேண்டும்?

## கிறிஸ்தவ பயன்பாடு

பெரும்பாலும், நல்ல கிறிஸ்தவர்கள் தங்கள் தனிப்பட்ட கிறிஸ்தவ அனுபவங்களுடன் எளிதில் பொருந்தக்கூடிய சில இறையியல் அல்லது தார்மீக நியமங்களை அடையும் வரை சாமுவேல் புத்தகத்தின் இந்த பகுதியை வாசிக்கிறார்கள். இப்போது, நமது புத்தகத்தின் முதல் பிரிவு எண்ணற்ற தலைப்புகளைத் தொடுகிறது. எனவே, இந்த அத்தியாயங்களை இந்த வழியில் அணுகுவதில் இயல்பாகவே தவறில்லை. ஆனால் இந்த அத்தியாயங்களை நாம் தவறாகக் கையாளவில்லை என்பதை உறுதிப்படுத்த, ஒரு கட்டத்தில் நமது கிறிஸ்தவ பயன்பாடுகளை சாமுவேலின் ஆசிரியர் வலியுறுத்திய கருப்பொருள்களுடன் சீரமைக்க வேண்டும்.

எளிமையாகச் சொன்னால், அரசாட்சிக்கான சாமுவேலின் முன்னுரையின் கிறிஸ்தவ பயன்பாடுகள் தேவனுடைய உடன்படிக்கைகள் மற்றும் தேவனுடைய ராஜ்யத்தின் மீதான நமது ஆசிரியரின் வலியுறுத்தல்களுடன் ஒத்துப்போக வேண்டும். இந்த இரண்டு கருப்பொருள்களும் நம் வாழ்க்கைக்கு இந்த அத்தியாயங்களின் பொருத்தத்தை நோக்கிய முக்கியமான நோக்குநிலைகளை வழங்குகின்றன. தேவனுடைய உடன்படிக்கைகளை நமது ஆசிரியர் வலியுறுத்துவதில் இது எவ்வாறு உண்மை என்பதை முதலில் பார்ப்போம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தேவனுடைய உடன்படிக்கைகள்

நமது முந்தைய பாடத்தில் நாம் குறிப்பிட்டபடி, சாமுவேலின் ஆசிரியர் ஆறு பெரிய தெய்வீக உடன்படிக்கைகளை அறிந்திருந்தார்: ஆதாம் மற்றும் நோவாவிலுள்ள எல்லா மக்களுடனும் தேவனுடைய உடன்படிக்கைகள்; ஆபிரகாம், மோசே மற்றும் தாவீதில் இஸ்ரவேல் தேசத்துடன் அவர் செய்த உடன்படிக்கைகள்; எரேமியா மற்றும் பிற தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்ட ஒரு புதிய உடன்படிக்கை, இஸ்ரவேல் மற்றும் யூதா அவர்கள் நாடுகடத்தலிலிருந்து திரும்பும்போது அவர்களுடன் தேவன் அதை செய்வார்.

இப்போது, இந்த பாடத்தில், சாமுவேல் அரசதிகாரத்திற்கு முன்னோடியாக இருந்த நிகழ்வுகள் மோசேயுடன் தேவன் செய்த உடன்படிக்கை முழுமையாக நடைமுறைக்கு வந்தபோது நடந்தது என்று பார்த்தோம். ஆனால் சாமுவேல் புத்தகம் எழுதப்பட்டபோது, தேவன் தாவீதுடன் தம்முடைய உடன்படிக்கையை நிலைநாட்டினார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த காரணத்திற்காக, இந்த அதிகாரங்களில் அவர் எழுதியதை தாவீது மற்றும் அவரது வீட்டின் வெளிச்சத்தில் தனது அசல் வாசகர்கள் பயன்படுத்த வேண்டும் என்று நமது ஆசிரியர் எதிர்பார்த்தார்.

ஆனால், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் சாமுவேலின் முன்னுரையைப் பின்பற்றும்போது, நாம் இன்னும் ஒரு படி மேலே செல்ல வேண்டும். கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையை தேவன் ஸ்தாபித்த பிறகு நாம் வாழ்கிறோம். இந்த புதிய உடன்படிக்கை மோசே மற்றும் தாவீதுடன் செய்யப்பட்ட தேவனுடைய முந்தைய உடன்படிக்கைகளின் இயக்கவியலை மறுசீரமைக்கிறது. இந்த மறுசீரமைப்பு மிகவும் முக்கியமானது, நமக்கு நம்பகமான வழிகாட்டி தேவை. ஒவ்வொரு தெய்வீக கருணையையும், மனித விசுவாசத்தின் ஒவ்வொரு தேவையையும், சாமுவேலினுடைய அரசுரிமையின் முன்னோடியில் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு சாபத்தையும் ஆசீர்வாதத்தையும் பயன்படுத்த, புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரின் தவறற்ற வெளிப்பாடு நமக்குத் தேவையாகும்.

முதலாவதாக, சாமுவேலின் முதல் பிரிவில் உள்ள ஒவ்வொரு தெய்வீக தயாளமும் கிறிஸ்துவில் தேவனுடைய கருணையால் மாற்றப்படுகிறது என்று புதிய ஏற்பாடு நமக்குக் கற்பிக்கிறது. நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலரின் பாடுகளிலிருந்து அவர்களை விடுவிக்க தேவன் இரக்கத்துடன் சாமுவேலை எழுப்பினார். ஆனால் தேவன் கிறிஸ்துவை அனுப்பினபோது இன்னும் பெரிய தயாளத்தை வெளிப்படுத்தினார். கிறிஸ்து தம்முடைய வாழ்க்கையிலும், மரணத்திலும், உயிர்த்தெழுதலிலும் தேவனுடைய மக்களை பல நூற்றாண்டுகளாக துன்பங்களிலிருந்து விடுவித்தார். கிறிஸ்து தம்முடைய ஜனங்களை யுகத்தின் முடிவுபரியந்தம் தொடர்ந்து விடுவிப்பார். கூடுதலாக,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சாமுவேலின் நாளில் தேவனுடைய இரக்கமுள்ள தலையீடு ஒவ்வொரு இஸ்ரவேலரின் வாழ்க்கையிலும் பல்வேறு குறிப்பிட்ட இரக்கங்களில் பாய்ந்தது. மேலும், கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, சாமுவேலின் நாட்களில் அவருடைய தயவை நாம் ஆராயும்போது, ஒவ்வொரு நாளும் தேவன் நம்மீது கருணை காட்டும் பல வழிகளை நாம் காணலாம்.

இரண்டாவதாக, அரசதிகாரத்திற்கான சாமுவேலின் முன்னுரையில் மனித உண்மைப் பற்றுறுதிக்கான தேவனுடைய தேவை புதிய உடன்படிக்கை யுகத்திற்கும் பொருந்துகிறது. கிறிஸ்துவின் பரிபூரண கீழ்ப்படிதலுக்கு நாம் முதலில் வழிநடத்தப்படுகிறோம். பெனின்னாளும் ஏலியின் குமாரர்களும் ஏலியின் குமாரர்களின் செல்வாக்கினால் இஸ்ரவேலரும் அடைந்த தோல்விகள், கிறிஸ்துவின் உண்மையான ஆராதனைக்கு முற்றிலும் முரணாக இருக்கின்றன. அன்னாளும், சாமுவேலும், சாமுவேலின் செல்வாக்கின்கீழ் இஸ்ரவேல் ஜனங்களும் செலுத்தும் உண்மையுள்ள ஆராதனையானது, கிறிஸ்து பெரிய, அதிக பரிபூரணமான ஆராதனையை தேவனுக்கு செலுத்துவார் என்பதை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், சாமுவேலின் அசல் வாசகர்கள் மோசேயின் விசுவாசமான ஆராதனையின் தரத்தை தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டியிருந்தது, புதிய ஏற்பாட்டின் ஆராதனையின் தரத்தை நம் வாழ்க்கையில் பயன்படுத்த நாம் அழைக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் திருச்சபை உண்மையான மற்றும் உண்மையுள்ள வழிபாட்டின் மூலம் நன்றியுள்ள மனித விசுவாசத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார். "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும்" என்று யோவான் 4:23 இல் இயேசு கூறினார்.

மூன்றாவதாக, இந்த அதிகாரங்களில் கீழ்ப்படியாமைக்கான தேவனுடைய சாபங்களையும், கீழ்ப்படிதலுக்கான ஆசீர்வாதங்களையும் புதிய ஏற்பாட்டின் கண்ணாடி மூலம் பார்க்க வேண்டும். இந்த பிரிவில் தேவனுடைய சாபங்கள் அவருடைய ஆராதனையை மீறுவதற்கு எதிராக அசல் வாசகர்களை எச்சரித்தன. கிறிஸ்துவை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள், அவர் பாவமற்றவராக இருந்தபோதிலும், அவரை இரட்சிக்கும் விசுவாசத்திற்கு வரும் ஒவ்வொருவரின் சார்பாக தேவனுடைய நித்திய சாபங்களை அனுபவித்தார். இன்றும், தேவன் தம்முடைய சபையை ஒழுங்குபடுத்தவும், நம்மை தம்மிடம் இழுக்கவும் தற்காலிக சாபங்களை ஊற்றுகிறார். அதேபோல், சாமுவேலின் இந்தப் பகுதியில் காணப்படும் தற்காலிக ஆசீர்வாதங்கள் ஒவ்வொரு இஸ்ரவேலரையும் உண்மையுள்ள ஆராதனையைப் பற்றி ஊக்குவிக்கின்றன. இந்த ஆசீர்வாதங்கள் கிறிஸ்து தேவனிடமிருந்து பெறும் பெரிய, நித்திய ஆசீர்வாதங்களுக்கு நம்மை வழிநடத்துகின்றன. ஆனால் அதே நேரத்தில், சாமுவேலின் இந்த பகுதியில் தேவனுடைய ஆசீர்வாதங்கள் நம் அன்றாட வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்களை நாம் புறக்கணிக்கக்கூடாது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அன்னாள், சாமுவேல் மற்றும் அனைத்து இஸ்ரவேலரையும் அவர்களின் உண்மையுள்ள கீழ்ப்படிதலுக்காக தேவன் ஆசீர்வதித்தபோது, கிறிஸ்து தம்முடைய சபைக்கு வெகுமதி அளிக்க தற்காலிக ஆசீர்வாதங்களை வழங்குகிறார் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. இந்த தற்காலிக ஆசீர்வாதங்கள், கிறிஸ்துவின் உண்மையுள்ள சீஷர்களுக்கு வரவிருக்கும் உலகில் நாம் பெறப்போகும் நித்திய ஆசீர்வாதங்களின் ருசியை அளிக்கின்றன.

நாம் இப்போது பார்த்தபடி, சாமுவேலின் அரசாட்சிக்கான முன்னுரையை தேவனுடைய உடன்படிக்கைகளை நோக்கி நமது கிறிஸ்தவ பயன்பாடுகளை நோக்குநிலைப்படுத்துவது முக்கியம். அதேசமயத்தில், தேவனுடைய ராஜ்யத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்ற நூலாசிரியரின் இலக்கையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## தேவனுடைய ராஜ்யம்

சாமுவேலின் இந்த முதல் பிரிவு, தேவனே சாமுவேலின் பிறப்பை வழிநடத்தினார் என்பதையும், தேவனுடைய ராஜ்யத்தை மேம்படுத்துவதற்காக இஸ்ரவேலின் தலைவராக சாமுவேலை உயர்த்தினார் என்பதையும் நிரூபிக்கிறது. நமக்குத் தெரிந்தபடி, சாமுவேல் பிற்பாடு தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்தார். தாவீதின் வீட்டாரின் நீதியுள்ள ஆட்சியே ஒரு நாள் முழு உலகத்தின் மீதும் தேவனுடைய ஆட்சியின் மகிமையான வெற்றிக்கு வழிநடத்தும்.

தாவீதின் பரிபூரண நீதியுள்ள குமாரனாகிய இயேசு, தேவனுடைய ராஜ்யத்தின் இந்த மகிமையான வெற்றியை நிறைவேற்றுகிறார் என்று புதிய ஏற்பாடு கற்பிக்கிறது. இருந்தாலும், எதிர்பாராத வழிகளில் இந்த நம்பிக்கையை அவர் நிறைவேற்றுகிறார். நமது முந்தைய பாடத்தில் நாம் கற்றபடி, இயேசு தேவனுடைய ராஜ்யத்தை மூன்று கட்டங்களில் பூமிக்குக் கொண்டுவருகிறார்; அவையாவன: அவருடைய முதல் வருகையின் போது அவருடைய ராஜ்யத்தின் தொடக்கம், திருச்சபை வரலாறு முழுவதும் அவரது ராஜ்யத்தின் தொடர்ச்சி மற்றும் அவர் மகிமையில் திரும்பும்போது அவருடைய ராஜ்யத்தின் நிறைவு. கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றிய இந்த மூன்று மடங்கு கண்ணோட்டம் புதிய ஏற்பாட்டு விசுவாசத்திற்கு முக்கியமானது. இந்த காரணத்திற்காக, நமது புத்தகத்தின் முதல் பிரிவின் ஒவ்வொரு கிறிஸ்தவ பயன்பாடும் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூன்று கட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

முதலாவதாக, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்க விழாவில், அரசதிகாரத்திற்கான சாமுவேலின் முன்னுரையை இயேசு எவ்வாறு நிறைவேற்றத் தொடங்கினார் என்பதை நாம் காணலாம். சாமுவேலின் நாட்களில், தேவன் சாமுவேலின் தலைமையின் மூலம் தனது ராஜ்யத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முன்னோக்கி நகர்த்தினார். மேலும், இயேசுவின் முதல் வருகையின் போது, அவர் இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலம் தேவனுடைய ராஜ்யத்தை மேலும் முன்னேற்றினார். இயேசு சிலுவையில் மரித்ததன் மூலம், இஸ்ரவேல் மீதும் தேசங்கள் மீதும் தீமை கொண்டிருந்த பிடியை உறுதியாக உடைத்தார். அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டபோது, முழு சிருஷ்டிப்பின் மீதும் அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. மத்தேயு 28:18 இல், அவர் பரமேறுவதற்கு சற்று முன்பு, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்கு உறுதியளித்தார், இந்த அர்த்தத்தில், சாமுவேலின் முதல் பிரிவில் தேவன் தம்முடைய ராஜ்யத்திற்காக நிறைவேற்றியது, கிறிஸ்து தாவீதின் சிங்காசனத்தை முதலில் எடுத்தபோது நிறைவேற்றிய பெரிய காரியங்களை நோக்கி நம்மைத் திருப்ப வேண்டும்.

இதற்கும் அப்பால், திருச்சபை வரலாறு முழுவதும் தம்முடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியில், கிறிஸ்து அரசதிகாரத்திற்கான சாமுவேலின் முன்னேற்பாடுகளை மேலும் மேலும் நிறைவேற்றுகிறார். நாம் ஏற்கெனவே பார்த்தபடி, சாமுவேலின் பிறப்பு, தேவனுடைய ராஜ்யம் பூமியின் எல்லைகள் வரை பரவத் தொடங்கும் என்ற அன்னாளின் நம்பிக்கையைப் புதுப்பித்தது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, தேவனுடைய ராஜ்யத்தை உலகம் முழுவதும் மேலும் மேலும் விரிவுபடுத்த கிறிஸ்து தம்முடைய சபையை வழிநடத்தி அதிகாரம் அளித்துள்ளார். ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுங்கள் என்று மத்தேயு 28:19, 20 இல் இயேசு கூறினதைப் போல, அரசுரிமைக்கான சாமுவேலின் முன்னேற்பாடுகளை நாம் பொருத்தும்போது, கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் எவ்வாறு நாளுக்கு நாள் தனது திருச்சபையின் மூலம் தேவனுடைய ராஜ்யத்தை தொடர்ந்து விரிவுபடுத்துகிறார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

> **மத்தேயுவின் சுவிசேஷம் முழுவதும், இயேசு பரலோக ராஜ்யமான தேவனுடைய ஆட்சியைப் பற்றி பிரசங்கிப்பதைக் காண்கிறோம். இது தேவனுடைய ஆட்சியைக் குறிக்கும் மற்றொரு யூத வழியாகும். நோயுற்றவர்களை குணப்படுத்துதல், பேய்களை விரட்டுதல், புயல்களை நிறுத்துதல் மற்றும் பல அதிசயங்கள் ஆகிய பல்வேறு வழிகளில் இயேசு தனது அதிகாரத்தை அல்லது பூமியில் தனது ஆட்சியை நிரூபிக்கிறார். ஆனால் மத்தேயு சுவிசேஷத்தின் உச்சக்கட்டத்திற்கு நீங்கள் வரும்போது, "வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று அவர் உயிர்த்தெழுந்து**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**பரமேறுவதற்கு முன்பு அவ்வாறு கூறுகிறார். அதனால் இப்போது இயேசு உயிர்த்தெழுந்து அவர் பிரபஞ்சத்தின் ஆட்சியாளராக இருப்பது தான் வித்தியாசமாகும். அவர் மேற்கோள் காட்டிய ஒரு உரை சங்கீதம் 110:1 இல் உள்ளதை கவனிக்கவும். "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும்." இயேசு இப்போது பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார், அவர் ஆட்சி செய்கிறார், அவருடைய எதிரிகள் அனைவரும் அவரது காலடியில் வைக்கப்படும் வரை அது தொடரும் என்று அவர் கூறுகிறார்.**

**– Dr. கிரெய்க் எஸ். கீனர்**

நிச்சயமாகவே, அரசுரிமைக்கான சாமுவேலின் முன்னேற்பாடு, கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தின் முடிவில் என்ன செய்வார் என்பதை எதிர்நோக்கும்படி நம்மை அழைக்கிறது. சாமுவேலின் இந்த அதிகாரங்கள், தாவீதின் வீடு தேவனுடைய எதிரிகள் அனைவரையும் அழித்து, உலகெங்கிலும் உள்ள தேவனுடைய மக்களுக்கு முடிவற்ற ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும் நாளைப் பார்க்க அசல் வாசகர்களை அழைத்தன. கிறிஸ்து திரும்ப வரும்போது, சாத்தான், அவனுடைய பிசாசுகள் மற்றும் தேவனுக்கு எதிரான கிளர்ச்சியில் அவர்களுடன் இணைந்த ஒவ்வொரு மனிதன் மீதும் அவர் இறுதி வெற்றியைப் பெறுவார். இதற்கும் மேலாக, கிறிஸ்து தம்முடைய ஜனங்கள் புதிய வானங்களிலும் புதிய பூமியிலும் தங்கள் சுதந்தரத்தைப் பெறுகையில், தம்முடைய வெற்றியின் நித்திய ஆசீர்வாதங்களை அவர்களுக்கு ஊற்றுவார். மத்தேயு 28:20b இல்  "இதோ, நான் எப்போதும் உலகத்தின் முடிவு பரியந்தம் உங்களுடன் இருக்கிறேன்" என்று தம்முடைய சீஷர்களை ஊக்குவிக்க இயேசு கூறியது போல், ஆகையால், அரசதிகாரத்திற்கான சாமுவேலின் முன்னேற்பாட்டை நாம் பொருத்தும்போது, கிறிஸ்துவின் மகிமையான வருகைக்காக நாம் காத்திருக்கும்போது நாமும் தேவனுடைய ராஜ்யத்தின் எதிர்காலத்தின் மீது நம் கண்களை வைத்திருக்க வேண்டும்.

இப்போது நாம் சாமுவேலின் அரசுரிமைக்கான முன்னேற்பாட்டைப் பார்த்தோம், சாமுவேல் புத்தகத்தின் இரண்டாம் பிரிவான 1 சாமுவேல் 8 - 2 சாமுவேல் 1 இல் சவுலின் தோல்வியுற்ற அரசாட்சிக்கு நாம் திரும்ப வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# சவுலின் தோல்வியுற்ற அரசாட்சி

தாவீது ராஜாவாக வருவதற்கு முன்பு நடந்த சம்பவங்களை தேவன் எப்படி வழிநடத்தினார் என்பதை சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் தொடர்ந்து விவரித்தபோது, அவர் சவுலை என்ன செய்ய வேண்டும்? என்கிற ஒரு கடினமான சவாலை அவர் எதிர்கொண்டார். தாவீதினுடைய வீட்டாரின் நீதியான ஆட்சி தேவனுடைய ராஜ்யத்தின் நம்பிக்கை என்றால், சாமுவேல் ஏன் முதலில் சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் செய்தார்? நமது ஆசிரியர் இந்த விஷயங்களை மிகவும் கவனமாகக் கையாண்டார். சவுலை இஸ்ரவேலின் ராஜாவாக தேவன் ஆரம்பத்தில் அங்கீகரித்ததை அவர் ஒப்புக்கொண்டார். ஆனால் தேவன் ஏன் சவுலையும் அவரது வீட்டையும் நிரந்தரமாக நிராகரித்து, அவர்களுக்குப் பதிலாக தாவீதை நியமித்தார் என்பதையும் அவர் விரிவாக விளக்கினார்.

நமது புத்தகத்தின் முதல் பிரிவை நாம் மதிப்பிட்ட அதே வழியில் சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியை ஆராய்வோம். இந்த பிரிவின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்துடன் தொடங்குவோம். பின்னர், அதன் கிறிஸ்தவ பயன்பாடுகள் குறித்து கருத்து தெரிவிப்போம். சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு திரும்புவோம்.

## அமைப்பும் உள்ளடக்கமும்

சவுலினுடைய ஆட்சியின் கணக்கு மிகவும் சிக்கலானது, எல்லாவற்றையும் ஒன்றாக இணைக்கும் முக்கிய கருப்பொருள்களாகிய தேவனுடைய ராஜ்யம் மற்றும் தேவனுடைய உடன்படிக்கைகளின் பார்வையை இழப்பது எளிது. முதலாவதாக, பல அம்சங்களில், தாவீதின் குடும்பம் இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யத்தை ஏன் வழிநடத்த வேண்டும் என்பதை விளக்குவதற்கு இந்த அதிகாரங்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. சவுல் இஸ்ரவேலில் தேவனுடைய ராஜ்யத்தை பல வழிகளில் முன்னேற்றினார் என்பதை நமது ஆசிரியர் தெளிவுபடுத்தினார். அவர் தனது அதிகாரத்தின் கீழ் கோத்திரத்தாரை ஒன்றிணைத்தார் மற்றும் தேவனுடைய எதிரிகளுக்கு எதிராக பல வெற்றிகளை இஸ்ரவேலருக்குக் கொடுத்தார். ஆனால் அதே நேரத்தில், தேவன் சவுலிடம் பொறுமையாக இருந்தபோது, தேவனுக்கு எதிரான சவுலின் கலகம் மிகவும் பெரியதாக இருந்தது, தேவன் சவுலையும் அவரது குமாரர்களையும் ராஜாவாக தகுதியற்றவர்களாக ஆக்கினார். தேவனுடைய கட்டளையின்மூலம், சவுலுக்குப் பதிலாக தாவீது, தேவனுடைய ராஜ்யத்தின் மகிமையான எதிர்காலத்தை நோக்கி இஸ்ரவேலை வழிநடத்துவார்.

இரண்டாவதாக, மோசேயுடனான தேவனுடைய உடன்படிக்கையின் இயக்கவியலின் அடிப்படையில் இவை அனைத்தும் எவ்வாறு நடந்தன என்பதை நமது ஆசிரியர் விளக்கினார். சவுலின் ஆட்சியின் போது தேவன் எவ்வாறு இஸ்ரவேலருக்கு தொடர்ந்து கருணை காட்டினார் என்பதை அவர் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டினார். அதேசமயத்தில், மனிதர்கள் உண்மைப் பற்றுறுதியோடு இருக்க வேண்டுமென்ற தேவனுடைய தேவையின் மீதும் அவர் கவனம் செலுத்தினார். குறிப்பாக, ஆராதனை மற்றும் அரசுரிமை சம்பந்தமான மோசேயின் சட்டங்களில் கவனம் செலுத்தினார். மோசேயின் பிரமாணங்களை சவுல் மீறியதால் தேவன் கடும் சாபங்களுக்கு வழிநடத்தினார் என்பதை அவர் மீண்டும் மீண்டும் நிரூபித்துக் காட்டினார். இந்தச் சட்டங்களுக்கு தாவீது கீழ்ப்படிந்தது தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு எப்படி வழிவகுத்தது என்பதையும் அவர் வெளிப்படுத்தினார். இந்தப் பிரிவினையின் முடிவில், தாவீதுக்கும் அவருடைய வீட்டாருக்கும் ஆதரவாக சவுலையும் அவருடைய குடும்பத்தையும் தேவன் நிராகரித்தார் என்பதில் சாமுவேலின் புத்தகத்தின் ஆசிரியர் எந்த சந்தேகத்திற்கும் இடமளிக்கவில்லை.

சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியின் அமைப்பும் உள்ளடக்கமும் நமது புத்தகத்தின் முதல் பிரிவுக்கு ஏறக்குறைய இணையாக உள்ளன. நமது ஆசிரியர் முதலில் 1 சாமுவேல் 8:1–15:35 இல் சவுலின் முந்தைய ஆண்டுகளுக்குத் திரும்பினார். பின்னர் அவர் 1 சாமுவேல் 16:1 - 2 சாமுவேல் 1:27 இல் சவுலிலிருந்து தாவீது வரையிலான இஸ்ரவேலின் தலைமையின் மாற்றத்தில் கவனம் செலுத்தினார். சவுலின் ஆரம்ப ஆண்டுகளில் தொடங்கி இந்த இரண்டு முக்கிய பகுதிகளையும் நாம் பார்ப்போம்.

## சவுலின் ஆரம்ப ஆண்டுகள் (1 சாமுவேல் 8:1–15:35).

வெளிப்படையாக, சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் சவுலின் பிறப்பு மற்றும் குழந்தைப் பருவத்தைப் பற்றி குறிப்பிடத்தக்க எதையும் காணவில்லை. சவுலின் ஆரம்ப ஆண்டுகளைப் பற்றிய அவரது பதிவு சவுலின் இளம் வயதில் தொடங்குகிறது மற்றும் 1 சாமுவேல் 8:1–12:25 இல் சவுலை ராஜாவாக தேவன் நிறுவியதைக் கையாள்கிறது. பின்னர், அவரது கதை நேரடியாக 1 சாமுவேல் 13:1–15:35 இல் சவுலை ராஜாவாக தேவன் நிராகரித்ததை நோக்கி நகர்கிறது.

**சவுல் ஸ்தாபிக்கப்படுதல் (1 சாமுவேல் 8:1–12:25).** சவுல் ராஜாவாக நிறுவப்பட்டது நான்கு சமச்சீர் படிகளில் விழும் பல அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதல் படி 8: 1-22 இல் அரசாட்சி பற்றிய சாமுவேலின் ஆரம்ப எச்சரிக்கை மற்றும் இஸ்ரவேலை ஒரு ராஜாவைக் கண்டுபிடிக்க சாமுவேலுக்கு தேவன் கொடுத்த ஆணையுடன் தோன்றுகிறது.

இந்த ஆரம்ப அத்தியாயம் இஸ்ரவேல் எதிர்கொள்ளும் ஒரு முக்கியமான பிரச்சனையுடன் தொடங்குகிறது. சாமுவேல் வயதாகிவிட்டார். அவருடைய குமாரர்கள் பேராசை பிடித்தவர்களாகவும் நேர்மையற்றவர்களாகவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அநியாயக்காரர்களாகவும் இருந்தார்கள். சாமுவேலைப் போல் அவருடைய குமாரர்களால் தேவனுடைய மக்களை வழிநடத்தி எதிரிகளை ஜெயிக்க வைக்க முடியாது. எனவே, இஸ்ரவேலின் மூப்பர்கள் ராமாவிலிருந்த சாமுவேலிடம் சென்று, தங்களை ஆட்சி செய்ய ஒரு ராஜாவைக் கேட்டார்கள். இந்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் விதமாக, 1 சாமுவேல் 8:9 இல், தேவன் சாமுவேலிடம் இவ்வாறு கூறினார்:

> **இப்போதும் அவர்கள் சொல்லைக் கேள்: ஆனாலும் உன் அபிப்பிராயத்தைக் காட்டும்படி அவர்களை ஆளும் ராஜாவின் காரியம் இன்னது என்று அவர்களுக்கு திடசாட்சியாய் தெரியப்படுத்து என்றார் (1 சாமுவேல் 8:9).**

எனவே, சாமுவேல் 8:11-17 இல் அரசுரிமையைக் குறித்ததான ஒரு நீண்ட எச்சரிக்கையை வெளியிட்டார். இந்த பகுதியில், சாமுவேல் உபாகமம் 17:14-20 இலிருந்து எடுத்தார், அங்கு மோசே இஸ்ரவேலின் எதிர்கால ராஜாக்களின் அதிகாரத்தை கடுமையாக கட்டுப்படுத்தினார். ராஜாக்கள் இந்த விதிமுறைகளை மீறுவார்கள் என்று சாமுவேல் எச்சரித்தார். ராஜாக்கள் இஸ்ரவேல் மக்களை அவர்களுடைய குமாரர்களைப் போருக்கு அனுப்புவதன் மூலமும், அரச நிலங்களை உழுது அறுவடை செய்யும்படி கட்டாயப்படுத்துவதன் மூலமும், ஆயுதங்களையும் போர்க் கருவிகளையும் தயாரிக்கும்படி மக்களைக் கட்டாயப்படுத்துவதன் மூலமும், அவர்களுடைய மகள்களைச் சமையல்காரர்களாகவும், வாசனைத் திரவியங்களைச் செய்பவர்களாகவும் கட்டாயப்படுத்துவதன் மூலமும், அவர்களுடைய நிலங்களைத் திருடுவதன் மூலமும், அவர்கள் சம்பாதித்ததில் பத்தில் ஒரு பங்கைக் கேட்பதன் மூலமும், அவர்களுடைய வேலைக்காரர்களையும் வாலிபர்களையும், கழுதைகளையும், மந்தைகளையும் எடுத்துக் கொள்வதன் மூலமும் அவர்களை ஒடுக்குவார்கள். கடைசியில், ஒரு மனித ராஜா தேவனுடைய மக்கள் எல்லாரையும் தனக்கு அடிமைகளாக்குவார் என்று சாமுவேல் எச்சரித்தார். சாமுவேல் இந்த இறுதி எச்சரிக்கையுடன் 8:18 இல் முடித்தார்:

> **.... உங்கள் ராஜாவினிமித்தம் அந்நாளிலே முறையிடுவீர்கள்... ஆனாலும் கர்த்தர் அந்நாளிலே உங்களுக்கு செவிகொடுக்க மாட்டார் என்றான் (1 சாமுவேல் 8:18).**

> **வேதத்தில், தேவன் மனிதனைப் படைத்தபோது, மனிதன் தேவனுடைய ஆட்சியின் கீழ், அவருடைய அரச அதிகாரத்திற்கு அடிபணிய வேண்டியதாயிருந்தது. ஆனால் சாமுவேலின் காலத்தில், தங்களைச் சுற்றியிருந்த மற்ற எல்லா தேசங்களுக்கும் ராஜாக்கள்**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

**இருப்பதை இஸ்ரவேலர் பார்த்தார்கள். அதனால், தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். சாமுவேல் அவர்களின் வேண்டுகோளால் மன உளைச்சலுக்கு ஆளானதைக் கண்ட தேவன் ... வருத்தப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். அவர் சாமுவேலிடம், "அவர்களின் குரலுக்கு மதிப்பளித்த பிறகு... ஒரு ராஜாவைத் தேர்ந்தெடுப்பது என்றால் வரி விதிப்பும் மற்ற நாடுகளுடன் போரும் இருக்கும் என்று அவர்களிடம் சொல்லும்" என்றார். மனிதர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட ராஜாக்கள் எல்லாவிதமான சுமைகளையும் கொண்டு வருவார்கள். இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்... தேவனுடைய பிரமாணத்தை அவர் உறுதியாய்க் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை ராஜாவுக்கு நினைப்பூட்டுங்கள், அதாவது ராஜாவுக்கு அவரைக் கட்டுப்படுத்த எல்லைகள் இருக்கும். இவ்வாறு, மனித அதிகாரிகள் தேவன் மீது மரியாதையும் மனிதர்கள் மீது அன்பும் வைத்திருக்க வேண்டும் என்றார். இதனால்தான், சவுல் ராஜாவாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, தேவன் அவனை புறக்கணித்தார். ஏனென்றால் அவன் தேவனை மதிக்கவில்லை.**

**– Rev. Dr. ஸ்டீபன் டோங், மொழிபெயர்ப்பு**

அரசதிகாரத்தைப் பற்றி சாமுவேல் எழுதிய முன்னுரையின் பதிவில் ஆராதனைக்கான மோசேயின் விதிமுறைகளை சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் வலியுறுத்தியிருப்பது உங்களுக்கு நினைவிருக்கும். அவர் தனது புத்தகத்தின் இந்த இரண்டாம் பிரிவிலும் வழிபாட்டின் இந்த வலியுறுத்தலை மீண்டும் மீண்டும் கூறினார் என்பதை நாம் காணலாம். ஆனால் சவுலின் ஆட்சியைப் பற்றி சாமுவேல் தனது பதிவின் தொடக்கத்தில் இஸ்ரவேலருக்கு கொடுத்த எச்சரிக்கைகளில் கவனம் செலுத்துவதன் மூலம், மோசேயினுடைய சட்டத்தின் இரண்டாவது அம்சமான இஸ்ரவேலின் ராஜாக்களுக்கு தேவன் கொடுத்த பிரமாணங்கள் என்பதைக் கொண்டு வந்தார். மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் இந்த அம்சம், சவுலின் தோல்வியுற்ற அரசத்துவத்தைப் பற்றிய பதிவில் அவர் பதிவு செய்வதற்கு முக்கிய பங்கு வகித்தது.

தங்கள் ராஜா தங்களை மோசமாக நடத்துவார் என்று நமது ஆசிரியர் இஸ்ரவேலை எச்சரித்தாலும், இந்த பகுதியின் இரண்டாவது படி தேவனுடைய கருணையைக் காட்டுகிறது. 9:1-10:16 இல், சாமுவேல் ஒப்புக்கொண்டதையும்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சவுலை ராஜாவாக தேவன் உறுதிப்படுத்தியதையும் நமது ஆசிரியர் அறிவித்தார். தேவன் சாமுவேலை சவுலிடம் அழைத்துச் சென்று, ஒரு தனிப்பட்ட விழாவில் சவுலை அபிஷேகம் செய்யும்படி கட்டளையிட்டார். 10:1 இல் நாம் வாசிக்கிறபடி, சாமுவேல் சவுலை நோக்கி: கர்த்தர் உன்னைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம்பண்ணினார் அல்லவா? என்றார். இதற்கும் மேலாக, சவுல் அபிஷேகம் செய்யப்பட்டதை தேவன் பல அற்புத அடையாளங்களால் உறுதிப்படுத்தினார்.

சவுலின் ஸ்தாபனத்தின் மூன்றாவது படி தேவனுடைய கருணையை இன்னும் அதிகமாக வெளிப்படுத்துகிறது. 10:17-11:13 சவுலை ராஜாவாக தேசிய அளவில் ஏற்றுக்கொள்வதையும், தேவனுடைய உறுதிப்படுத்தலையும் தெரிவிக்கிறது. இஸ்ரவேலிலிருந்த சிலர், சவுல்தான் ராஜாவா என்று சந்தேகித்தார்கள். ஆனால் இஸ்ரவேலின் அனைத்து கோத்திரங்களையும் ஒன்றிணைக்கவும், அம்மோனியருக்கு எதிரான வெற்றியில் அவர்களை வழிநடத்தவும் தேவன் சவுலுக்கு உதவினார். இஸ்ரவேலில் இருந்த ஒவ்வொருவரும் சவுலுக்குத் தங்கள் முழு ஆதரவைக் கொடுத்தார்கள்.

இருப்பினும், இந்த நேரத்தில் சவுலுக்கும் இஸ்ரவேலருக்கும் தேவன் மிகுந்த தயவைக் காட்டிய போதிலும், இந்த பகுதியின் நான்காவது படி சாமுவேலின் ஆரம்ப எச்சரிக்கைகளை எதிரொலிக்கிறது. 11:14-12:25 இல், அரசாட்சி மற்றும் தேவனுடைய கட்டளையை நிறைவேற்றுவது பற்றிய சாமுவேலின் இறுதி எச்சரிக்கைகளுடன் நமது ஆசிரியர் இந்த பகுதியை முடித்தார். இஸ்ரவேலருக்கு தேவன் காட்டிய தயவை உணர்ந்து கொள்ளும்படி சாமுவேல் அழைப்பு விடுத்தார். அதேசமயத்தில், தேவனுக்கு நன்றியறிதலோடு தேவனுடைய தயவுக்குப் பிரதிபலிக்கும்படியும் அவர் அவர்களை எச்சரித்தார். ”[தேவன்] அவர் உங்களிடத்தில் எவ்வளவு மகிமையான காரியத்தை செய்தார் எனபதை சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் இன்னும் பொல்லாப்பை செய்யவே செய்வீர்களானால் நீங்களும் உங்கள் ராஜாவும் நாசமடைவீர்கள் என்றான் ” என்று 12:24,25 இல் அவர் கூறினார்.

**சவுலை நிராகரித்தல் (1 சாமுவேல் 13:1–15:35).** சவுல் ராஜாவாக நிறுவப்பட்டதன் முடிவில் சாமுவேலின் அச்சுறுத்தும் எச்சரிக்கை, பின்வரும் விஷயங்களுக்கு மேடை அமைக்கிறது. 13:1–15:35-ல், சவுலை ராஜாவாக தேவன் நிராகரித்ததைப் பற்றி வாசிக்கிறோம். இந்த அதிகாரங்கள் முழுவதும், சவுல் எவ்வாறு ஆராதனைக்கான தேவனுடைய விதிமுறைகளையும் இஸ்ரவேலின் ராஜாக்களுக்கான அவரது கட்டளைகளையும் மீறினார் என்பதை சாமுவேலின் ஆசிரியர் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார். இதன் விளைவாக, தேவன் தம்முடைய உடன்படிக்கையின் சாபங்களை ஊற்றி, சவுலையும் அவருடைய தலைமுறையினரையும் இஸ்ரவேலின் சிங்காசனத்திலிருந்து நிராகரித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சவுலின் நிராகரிப்பைப் பற்றிய நமது ஆசிரியரின் பதிவு இரண்டு முக்கிய குழுக்களாக வரும் பல அத்தியாயங்களைக் கொண்டுள்ளது: 1 சாமுவேல் 13:1–14:52 இல் சவுலின் முந்தைய நிராகரிப்பு மற்றும் 15:1-35 இல் சவுலின் இறுதி நிராகரிப்பு. சவுலின் முந்தைய நிராகரிப்பில், சவுலுக்கும் பெலிஸ்தருக்கும் இடையேயான தொடர்ச்சியான யுத்தங்களை நாம் காண்கிறோம். இந்த யுத்தங்கள் 13:1-4 இல் பெலிஸ்தியருக்கு எதிரான இஸ்ரவேலின் ஆரம்ப தாக்குதலுடன் தொடங்குகின்றன. சவுலின் இருதயத்தையும், தேவனுடைய ஜனங்களைப் போருக்கு அனுப்பியதன் காரணமாகவும், தானே பாதுகாப்பான தூரத்தில் இருந்தபோது அவர்களை அவர் மோசமாக நடத்தியதையும் உடனடியாக நாம் பார்க்கிறோம். இதற்கும் மேலாக, சவுலின் குமாரன் யோனத்தான் பெலிஸ்தரை வென்றபோது, சவுல் தனக்கு வெற்றியை உரிமை கொண்டாடினார்.

இஸ்ரவேலின் ஆரம்ப தாக்குதலுக்குப் பிறகு, 13: 5-15 இல் பெலிஸ்தரின் எதிர் தாக்குதலுக்கு இஸ்ரவேலர் ஆயத்தம் செய்ததை காணமுடியும். போருக்குத் தயாராக நிற்கும்படி சவுல் ஜனங்களைக் கூப்பிட்டார். ஆனால், மக்கள் பயந்துபோய் குகைகளிலும் பாறைகளுக்குள்ளும் ஒளிந்துகொண்டார்கள். படை சிதறத் தொடங்கியபோது, சவுல் பீதியடைந்து, சாமுவேலின் கட்டளைகளை நேரடியாக மீறி தகன மற்றும் சமாதான பலிகளை தேவனுக்கு செலுத்தினார். சவுல் வரும்வரை காத்திருக்கும்படியும் போருக்கு முன் பலிகளைச் செலுத்தும்படியும் சாமுவேல் சவுலுக்குக் கட்டளையிட்டிருந்தார். ஆனால் சவுல் தன் படையை தேவனுக்குப் பயந்து வழிநடத்தி, பாதுகாப்புக்காக தேவனை நம்பியிருப்பதை விட, தானே பலிகளைச் செய்ய முடிவு செய்தார். இறுதியாக சாமுவேல் வந்தபோது, சவுல் தேவனுடைய ஆராதனையை மீறியதால் தேவனுடைய நியாயத்தீர்ப்பு வார்த்தைகளை அறிவித்தார். 13:14 இல், சாமுவேல் சவுலை நோக்கி:

> **இப்போதோ உம்முடைய ராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள்மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான். (1 சாமுவேல் 13:14).**

சவுலின் முந்தைய நிராகரிப்பைப் பற்றிய நமது ஆசிரியரின் கணக்கு 13:16-14:46 இல் பெலிஸ்தயருடனான இஸ்ரவேலின் போருடன் தொடர்கிறது. முதலாவதாக, சவுல் தன் ராஜ அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திய மற்றொரு வழியையும் நாம் கற்றுக்கொள்கிறோம். பொறுப்பற்ற முறையில், அவர் தனது இராணுவத்திற்கு இரும்பு வாள்கள் மற்றும் ஈட்டிகளை வழங்க

புறக்கணித்தார். மாறாக, அவர் தனக்கும் தனது மகன் யோனத்தானுக்கும் மட்டுமே அவற்றை வழங்கினார்.

சவுல் ஆரம்பத்தில் போரிலிருந்து விலகி இருந்தார் என்பதையும் நமது ஆசிரியர் சுட்டிக்காட்டினார். யோனத்தான் தேவன் மீது மிகுந்த விசுவாசத்தோடு செயலில் இறங்கிய பிறகும், பெலிஸ்தர் பீதியடைந்த பிறகும் தான், சவுல் போரில் ஈடுபட்டார். ஆனால் அப்போதும் சவுல் தேவனுடைய ஆராதனையை மீறினார். அவர்கள் போருக்குத் தயாராகும்படி தேவனுடைய பெட்டியைக் கொண்டுவரும்படி ஆசாரியனாகிய அகியா அவனைக் கூப்பிட்டான். ஆனால் பெலிஸ்தரின் தாக்குதல் நெருங்கிவிட்டதாகத் தோன்றியபோது, சவுல் ஆசாரியனைத் தடுத்து, சரியான ஆயத்தம் இல்லாமல் போருக்கு விரைந்தார்.

சவுல் தன் படையை இன்னுமதிகமாக கொடுமைப்படுத்தினார். பெலிஸ்தரைத் துரத்திச் செல்ல சவுல் அவ்வளவு ஆர்வமாக இருந்தார். சாப்பிட நிற்கும் எந்த படைவீரனையும் சபிப்பதாக அறிவித்தார். முரண்பாடாக, யோனதான் இந்த அச்சுறுத்தலைப் பற்றி அறியாமல் கொஞ்சம் தேன் சாப்பிட்டார். சவுலின் வீரர்கள் அவரைக் கண்டித்தபோது, தன் அப்பா எவ்வளவு முட்டாள்தனமாக நடந்துகொண்டார் என்பதை யோனத்தான் கவனித்தார். 14:29,30 இல்,"என் தகப்பன் தேசத்தின் ஜனங்களை கலங்கப்பண்ணினார்… இன்று ஜனங்கள் தங்களுக்கு ஆக்கப்பட்ட சத்துருக்களின் கொள்ளையிலே ஏதாகிலும் புசித்திருந்தால் , எத்தனை நலமாயிருக்கும். பெலிஸ்தருக்குள் உண்டான சங்காரம் மிகவும் அதிகமாயிருக்குமே " என்று யோனதான் கூறினார்.

போருக்குப் பிறகு, தன் வீரர்கள் சாப்பிடக் கூடாது என்று சவுல் வற்புறுத்தியதால், ஆராதனையில் மீண்டும் ஒரு மோசமான அத்துமீறல் நடந்தது. சவுலின் ஆண்கள் மிகவும் பசியுடன் இருந்தார்கள், அவர்கள் இரத்தம் உட்பட கொள்ளையிலிருந்து விலங்குகளை அவசரமாக படுகொலை செய்து விழுங்கினர். இது லேவியராகமம் 17:10 இல் கண்டிப்பாக தடைசெய்யப்பட்ட ஒரு நடைமுறையாகும். இந்தப் பழக்கம் தேவனுடைய பிரமாணத்தை மீறுகிறது என்பதை சவுலுக்கு நினைப்பூட்டிய பிறகுதான், தேவன் கட்டளையிட்டபடியே மிருகங்களைக் கொல்வதற்காக தன் ஆட்களுக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டினார். 14:35 இல் "கர்த்தருக்கு அவர் கட்டின முதலாவது பலிபீடம் அதுவே" என்று கருத்துரைப்பதன் மூலம் சவுலின் முயற்சிகளை நமது ஆசிரியர் மேலும் குறைத்தார்.

அந்த நேரத்தில், சவுல் இறுதியாக வழிகாட்டுதலுக்காக தேவனிடம் வேண்டினார், ஆனால் 14:37 இன் படி, "[தேவன்] அன்று அவருக்கு பதிலளிக்கவில்லை." சவுல் தன் படையிடம் கட்டளையிட்டிருந்த முட்டாள்தனமான ஆணையை யோனத்தான் மீறிவிட்டதால், தேவன் தனக்குப் பதில் கொடுக்கவில்லை என்பதை ஆசாரியர்களின் உதவியோடு சவுல் அறிந்துகொண்டார். போருக்குத் தலைமை தாங்கிய யோனத்தான் சாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேண்டும் என்று கட்டளையிட்டதன் மூலம் சவுல் மறுபடியும் தன் கொடுமையான ஆட்சியை வெளிப்படுத்தினார். போர்ச்சேவகர்கள் யோனத்தானுக்காக மீட்கும்பொருளைக் கொடுத்ததால்தான் சவுல் அவனைக் கொல்லவில்லை.

இறுதியாக, 14:47-52 இல், சாமுவேலின் ஆசிரியர் சவுலின் ஆட்சியின் போது நடந்த போர்கள் மற்றும் அவரது இராணுவத்தை வழிநடத்திய அதிகாரிகளின் சுருக்கத்துடன் சவுலின் முந்தைய நிராகரிப்பைப் பற்றிய தனது பதிவை முடித்தார். ஆனால் அவர் 52 வது வசனத்தில் ”சவுலின் நாட்களிலெல்லாம் பெலிஸ்தரோடே கடும் யுத்தம் நடந்தது” என்கிற இந்த அச்சுறுத்தும் குறிப்பைச் சேர்த்தார். தேவன் சாமுவேலுக்கு கொடுத்த வெற்றிகளுக்கு நேர்மாறாக, தேவன் சவுலை மிகவும் நிராகரித்ததால் பெலிஸ்தரை ஒருபோதும் உறுதியாக தோற்கடிக்கவில்லை. இதற்கும் மேலாக, ”சவுல் ஒரு பலவானையாவது, பராக்கிரமசாலியையாவது கண்டபோது, அவனைத் தன்னோடே இணைத்துக்கொண்டான்” என்று 52 ஆம் வசனத்திலும் நாம் வாசிக்கிறோம். சாமுவேல் எச்சரித்தபடியே, சவுல் தொடர்ந்து தேவனுடைய மக்களை ஒடுக்கினார்; முடிவில்லாத போர்களில் தன்னால் முடிந்த அளவுக்கு பலரை கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்தினார்.

சவுலை தேவன் முன்பு நிராகரித்ததைப் புகாரளித்த பிறகு, நமது ஆசிரியர் சவுலின் இறுதி நிராகரிப்புக்கு 15:1-35 இல் திரும்பினார், அங்கு அவர் அமலேக்கியருடனான சவுலின் போரைப் பற்றி அறிக்கையைக் கொடுத்தார். யாத்திராகமம் 17:14-16 மற்றும் எண்ணாகமம் 24:20 ஆகியவற்றின் படி, அமலேக்கியரை முற்றிலுமாக அழிக்கும்படி தேவன் கட்டளையிட்டிருந்தார், ஏனென்றால் அவர்கள் மோசேயின் நாட்களில் இஸ்ரவேலை மிகவும் தொந்தரவு செய்திருந்தனர். சவுலைப் போருக்கு அனுப்புவதற்கு முன்பு, மோசேயின் நியாயப்பிரமாணத்தில் தொகுக்கப்பட்டுள்ள இந்தத் தெய்வீகக் கட்டளையை சாமுவேல் அவருக்கு வெளிப்படையாக நினைப்பூட்டினார்.

ஆனால் அமலேக்கியரை வென்ற பிறகு, சவுல் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லை. 15:9 இன் படி, சவுலும் அவரது ஆட்களும் கொள்ளையடித்ததில் சிறந்ததை அழிக்க தயாராக இல்லை. அதற்கு பதிலாக, ”அசட்டைபண்ணப்பட்டவைகளும் பயனற்றவைகளுமாயிருந்தவைகளையெல்லாம் அழிவுக்கு அர்ப்பணித்தார்கள்.” மற்ற பகுதிகளில் நாம் விளக்குவது போல, ”அழிவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட” என்ற சொற்றொடர் எபிரேய வினைச்சொல்லான சாரம் (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (*חָרַם*) என்பதிலிருந்து வருகிறது. இஸ்ரவேலின் போர்களில் அழிவுக்கு தேவன் தேவைப்படுவது எதுவாக இருந்தாலும் அது தேவனுக்கு ஆராதனையோடு கூடிய ஸ்தோத்திர பலி என்பதை இந்தச் சொல் சுட்டிக்காட்டியது. ஆனால் சவுல் தனது வாழ்க்கையின் இந்த கட்டத்தில் தேவனுடைய ஆராதனையிலிருந்து வெகு தூரம்

திரும்பியிருந்தார், அவர் தேவனிடமிருந்து கொள்ளையடித்த மிகச் சிறந்ததை நிறுத்தியது மட்டுமல்லாமல், 12 வது வசனத்தில் அவர் தனக்கு ஒரு நினைவுச்சின்னத்தை அமைத்தார் என்று அறிகிறோம். மேலும், சாமுவேல் சவுலை எதிர்கொண்டபோது, சவுல் தனது படையை பொய்யாக குற்றம் சாட்டினார். எனவே, 15:28 இல், கர்த்தர் அறிவுறுத்தியபடியே, சாமுவேல் இந்த விதிவசமான வார்த்தைகளை சவுலுக்கு வழங்கினார்:

> **அப்பொழுது சாமுவேல் அவனை நோக்கி: கர்த்தர் இன்று உம்மிடத்திலிருந்த இஸ்ரவேலின் ராஜ்யத்தைக் கிழித்துப்போட்டு; உம்மைப்பார்க்கிலும் உத்தமனாயிருக்கிற உம்முடைய தோழனுக்கு அதைக் கொடுத்தார் (1 சாமுவேல் 15:28).**

சாமுவேல் 29 வது வசனத்தில் தேவனுடைய தீர்ப்பு மாற்ற முடியாதது என்று கூறினார்:

> **இஸ்ரவேலின் ஜெயபலமானவர் பொய் சொல்லுகிறதும் இல்லை; தாம் சொன்னதைப்பற்றி மனஸ்தாபப்படுகிறதும் இல்லை; மனம் மாற அவர் மனுஷன் அல்ல (1 சாமுவேல் 15:29).**

> **சவுல் ஒரு ராஜாவாக தோல்வியுற்றார், அவருடைய ராஜ்யம் தோல்வியடைந்தது, ஏனென்றால் அவருக்கு தேவையான ஆவிக்குரிய பண்புகள் மற்றும் தகுதிகள் இல்லை. அவருக்கு வெளிப்புற திறமைகள் இருந்தன. ஆனாலும், அவர் தன் இருதயத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவில்லை, அவர் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியவில்லை. உதாரணமாக, அமலேக்கியருடன் போரிட கர்த்தர் அவரை அனுப்பி, அமலேக்கியரை அழிக்கச் சொன்னபோது ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் முக்கியமான சம்பவம் நடந்தது. அமலேக்கை அழிவுக்கு அர்ப்பணிப்பது என்றால் என்ன என்பது அப்போது புரிந்தது. சவுல் அப்படிச் செய்யவில்லை. அதற்குப் பதிலாக, ராஜாவையும் ஆடுகளில் சிறந்ததையும் விட்டுவைத்தார். சாமுவேல் அவரிடம் வந்து, அதைப் பற்றி அவரிடம் கேட்டபோது, சவுல் பலவீனமான சாக்குப்போக்குகளைச் சொல்லி தனது கீழ்ப்படியாமையை நியாயப்படுத்தினார், ஆனால் அவை அர்த்தமற்றவை. எனவே, ”அவன் என்னைப் பின்பற்றுவதை விட்டு விலகி, என் கட்டளைகளின்படி**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> செய்யாமற்போனான்” என்று தேவன் சொன்னார். இவை கர்த்தருடைய வார்த்தைகள். ”அவன் என்னை நிராகரித்ததால் நான் அவனை நிராகரித்தேன்” என்று தேவன் சொல்வது போல் இருக்கிறது. சவுல் கலகக்காரனாக இருந்தார். கலகத்தைக் குறித்து சாமுவேல் தெளிவாக இருந்தான். ”கலகம் குறிசொல்லும் பாவத்திற்கு ஒப்பாயிருக்கிறது” என்று அவர் சொன்னார். சவுல் கலகக்காரனாகவும் ஆணவக்காரனாகவும் இருந்தார். அவர் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவில்லை, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றவில்லை, ஆகவே தேவன் அவரை ராஜாவாக இருக்கவிடாமல் நிராகரித்தார்.
>
> – Rev. Dr. எமாட் ஏ.மிக்கேல், மொழிபெயர்ப்பு

சவுல் மனந்திரும்பி மன்னிப்பு கேட்டாலும், தேவன் அவரை நிராகரித்தது இறுதியானது. அமலேக்கியரின் ராஜாவை சாமுவேல் வாளுக்கு இரையாக்கிய பிறகு, அவர் சவுலை விட்டுப் பிரிந்தார், அதன் பிறகு அவரைப் பார்க்கவே இல்லை. பல வருஷங்களாக சவுலுக்கு தேவன் கருணை காட்டியிருந்தார். ஆனால், சவுல் தேவனுக்கு உண்மையற்றவராக இருந்ததால் இனிமேலும் அவர் ராஜாவாக இருக்க மாட்டார்.

சவுலின் ஆட்சியின் ஆரம்ப ஆண்டுகளில் தேவன் எவ்வாறு அவரை ராஜாவாக நிறுவி நிராகரித்தார் என்பதை நாம் பார்த்தோம். இப்போது, 1 சாமுவேல் 16:1–2 சாமுவேல் 1:27-ல் சவுலிலிருந்து தாவீதிடம் அரச தலைமை மாறியதைப் பார்ப்போம்.

## தலைமைத்துவத்தில் மாற்றம் (1 சாமுவேல் 16:1 – 2 சாமுவேல் 1:27).

நமது புத்தகத்தின் முதல் பிரிவில் ஏலியின் குடும்பத்திலிருந்து சாமுவேலுக்கு மாறியதைப் போலவே, இந்த அதிகாரங்களும் சவுலுக்கும் தாவீதுக்கும் இடையே உள்ள பல முரண்பாடுகளை முன்வைக்கின்றன, அவை சவுலின் இடத்தில் தாவீது ஏன் ராஜாவாக ஆனார் என்பதை விளக்குகின்றன.

இந்த அத்தியாயங்களின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள, பண்டைய உலகில் இளைய, வெற்றிகரமான போர்வீரர்கள் தங்கள் அரசர்களுக்கு எதிராக கலகங்களை வழிநடத்துவது மிகவும் பொதுவானதாக இருந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே, தாவீது சவுலுக்கு எதிராக ஒரு கலகத்தை வழிநடத்தினார் என்று இஸ்ரவேலில் பலர் கருதுவது இயல்பானதே. ஆனால் இந்த அதிகாரங்களில் நமது ஆசிரியர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நேராக பதிவு செய்துள்ளார். தாவீது சவுலுக்கு எதிராகக் கலகம் செய்யவில்லை. மாறாக, தாவீது சவுலின் மனத்தாழ்மையான ஊழியராக இருந்தார்; சவுல் தாவீதிடம் பகைமை பாராட்டினார். அப்படியானால், சவுலுக்குப் பதிலாக தாவீது எப்படி இஸ்ரவேலின் ராஜாவாக ஆனார்? தேவன் கிரியை செய்கிறார் என்று நமது ஆசிரியர் விளக்கினார். தேவன் தாமே சவுலின் கலகத்திற்காக சாபங்களை ஊற்றுவதன் மூலமும், தாவீது மனத்தாழ்மையுடன் செய்த சேவைக்காக ஆசீர்வாதங்களை ஊற்றுவதன் மூலமும் இந்த மனிதர்களின் நிலைமைகளை மாற்றினார்.

தலைமைத்துவத்தின் இந்த மாற்றத்தின் போது தேவனுடைய சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் மாற்றியமைக்கும் நமது ஆசிரியரின் கணக்கு நான்கு முக்கிய படிகளாக பிரிக்கிறது; அவையானவ:16: 1-23 இல் தாவீதுக்கு எதிரான சவுலினுடைய விரோதத்தின் பின்னணி; 17:1–23:28 இல் தாவீதுக்கு எதிராக சவுலினுடைய பகைமையின் அதிகரிப்பு; 23:29–27:12 இல் சவுலினுடைய பகைமையின் விரிவாக்கம்; மற்றும் 1 சாமுவேல் 28:1-2 சாமுவேல் 1:27 இல் சவுலினுடைய பகைமையின் பின்விளைவுகள்.

**பகைமையின் பின்னணி (1 சாமுவேல் 16:1-23).** முதல் படியான சவுலினுடைய விரோதத்தின் பின்னணி இந்த அத்தியாயங்களில் நிகழும் எல்லாவற்றிற்கும் பின்னால் செயல்படும் ஆவிக்குரிய சக்திகளை வெளிப்படுத்துகிறது. இரண்டு அத்தியாயங்களில் முதல் பகுதியில், 16:1-13 தாவீது மற்றும் தேவனுடைய ஆவியைப் பற்றியது. இந்த அத்தியாயத்தில், தேவன் சாமுவேலை தனது சொந்த ஊரான ராமாவிலிருந்து பெத்லகேமுக்கு பயணிக்க அழைத்தார், அங்கு அவர் தாவீதை இஸ்ரவேலின் புதிய ராஜாவாக மாற்றும் செயல்முறையைத் தொடங்கினார்.

ஒரு தனிப்பட்ட விழாவில் தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்யும்படி சாமுவேலுக்குக் கட்டளையிட்டதன் மூலம் தேவன் தாவீதை ஆசீர்வதித்தார். தாவீது அபிஷேகம் செய்யப்பட்டபோது, மற்றொரு குறிப்பிடத்தக்க ஆசீர்வாதம் அவர்மீது விழுந்தது. 16:13 இல் ”கர்த்தருடைய ஆவியானவர்” - எபிரேய மொழியில் (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) ரூவாக் யாவே (רוּחַ־יְהוָה) - ”அந்த நாள் முதல் கர்த்தருடைய ஆவியானவர் தாவீதிடம் வந்தார்” என்று வாசிக்கிறோம். ”அந்த நாளிலிருந்து” தாவீது செய்த பல நல்ல காரியங்களுக்கு தேவனுடைய ஆவிதான் ஊற்று என்று சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் தெளிவுபடுத்தினார். 16:18 மற்றும் 18:12, 14 மற்றும் 28 இல் சில முக்கியமான தருணங்களில் கர்த்தர் தாவீதுடன் இருந்தார் என்ற உண்மையை முன்னிலைப்படுத்துவதன் மூலம் நமது ஆசிரியர் இந்த கண்ணோட்டத்தை வெளிப்படையாக வலுப்படுத்தினார்.

சவுலினுடைய பகைமையின் பின்னணியைக் கையாளும் இரண்டாவது அத்தியாயம் 16:14-23 இல் சவுல் மற்றும் ஒரு தீய ஆவியைப் பற்றி அறிக்கை செய்வதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாட்டை அமைக்கிறது.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த வசனங்கள் சவுலின் தலைநகரான கிபியாவில் தாவீது தவறாமல் சவுலுக்கு சேவை செய்ய வந்த காலத்தை மையமாகக் கொண்டுள்ளன. இந்த நிகழ்வுகள் எப்போது நிகழ்ந்தன என்பதை நாம் துல்லியமாக உறுதியாக சொல்ல முடியாது, ஏனென்றால் பின்வரும் அத்தியாயத்தில் சவுல் தாவீதை அடையாளம் காணவில்லை.

16:14 இல் இருக்கிற திறப்பானது இந்த நேரத்தில் சவுல் மீது விழுந்த தேவனுடைய இரண்டு சாபங்களை நமக்குச் சொல்கிறது: "கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு விலகியது, கர்த்தரிடத்திலிருந்து ஒரு தீங்கு விளைவிக்கும் ஆவி" - அல்லது எபிரேய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டபடி, "தீய ஆவி" - "அவரை வேதனைப்படுத்தியது." இந்த அதிகாரங்களின் பிற்பகுதியில், இந்த சாபங்களின் விளைவுகளை நமது ஆசிரியர் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளார். 18:12 இல் நாம் காணுகிற பரிசுத்த ஆவியானவர் சவுலை விட்டுச் சென்ற காரியம் சவுலை பயமுறுத்தியது, தீய ஆவி 18:10 மற்றும் 19:9 இல் சவுலை பைத்தியமாக்கியது. சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர் குறிப்பிடுகிறபடி, பொல்லாத ஆவி வேதனைப்படுத்தியபோது சவுலின் ஆட்கள் தாவீதை உதவிக்கு அவரிடம் அழைத்து வந்தனர். தாவீது ஒரு திறமையான இசைக்கலைஞர், தைரியமான போர்வீரர், விவேகமான பேச்சாளர் என்று சவுலின் ஆட்கள் வர்ணித்தனர். ஆனால் மிக முக்கியமாக, சவுலைப் போலல்லாமல், கர்த்தர் தாவீதுடன் இருந்தார் என்று அவர்கள் சொன்னார்கள். இந்த அத்தியாயத்தின் முடிவில் சவுலுக்கும் தாவீதுக்கும் இடையிலான இந்த வேறுபாட்டை நமது ஆசிரியர் உறுதிப்படுத்தினார், அங்கு தாவீது வீணை வாசித்தபோது சவுலை துன்புறுத்தும் தீய ஆவி வெளியேறும் என்று அவர் அறிவித்தார்.

**சவுலின் பகைமையின் அதிகரிப்பு (1 சாமுவேல் 17:1–23:28).** சவுலிலிருந்து தாவீதுக்கு மாறுதலின் இரண்டாம் படி, 17:1–23:28 இல் தாவீதுக்கு எதிராக சவுலின் விரோதம் அதிகரிக்கும் போது தேவனுடைய ஆசீர்வாதங்கள் மற்றும் சாபங்களில் கவனம் செலுத்துகிறது. இந்த அதிகாரங்கள் 17:1–18:9 இல் சவுலின் ஆரம்ப விரோதத்தை விளக்கும் ஒரு கணக்குடன் தொடங்குகின்றன. இங்கே, சாமுவேலின் முழு புத்தகத்திலும் மிக நீண்ட ஒற்றை விவரிப்பை நாம் காண்கிறோம், இது பொதுவாக தாவீது மற்றும் கோலியாத்தின் கதை என்று அழைக்கப்படுகிறது. சவுலும் அவரது இராணுவமும் கிபியாவை விட்டு வெளியேறி, அசேக்காவுக்கும் சோக்கோவுக்கும் அருகில் பெலிஸ்தருடன் போரை ஆயத்தம் செய்ததாக ஆசிரியர் அறிவித்தார். அங்குதான் மாபெரும் வீரனாகிய கோலியாத் தன்னுடன் போரிடுமாறு இஸ்ரவேலருக்கு சவால் விட்டான். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த சம்பவம் சவுலின் மன்றத்தில் தாவீதின் சேவைக்கு முன்பு நடந்தது, ஏனென்றால் 17:58 ல், சவுல் தாவீதிடம் அவன் யார் என்று கேட்டார்.

நன்கு அறியப்பட்ட இந்தக் கதையில் சவுலுக்கும் தாவீதுக்கும் இடையே குறிப்பிடத்தக்க பல வேறுபாடுகள் தோன்றுகின்றன. உதாரணமாக, 17:11 இல், சவுலும் அவரது இராணுவமும் கோலியாத்தின் அச்சுறுத்தல்களைக் கேட்டபோது "கலக்கமும் பயமும் அடைந்தனர்". ஆனால் தேவனுடைய ஆவியானவர் ஒரு இளைஞனும், எளிமையான மேய்ப்பனுமான தாவீதை தைரியத்தோடும் விசுவாசத்தோடும் ஆசீர்வதித்தார். "நான் இஸ்ரவேலின் சேனைகளின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் உன்னிடம் வருகிறேன்" என்று 17:45-47 இல், தாவீது கோலியாத்திற்கு பதிலளித்தார். "யுத்தம் கர்த்தருடையது" என்றான். கோலியாத்தை தாவீது வென்றது மற்றவர்களின் ஆதரவையும் ஆசீர்வதித்தது. ஆரம்பத்தில், சவுலின் மகனான யோனத்தான் தாவீதை ஆழமாக நேசித்தார். மேலும், போருக்குப் பிறகு சவுலும் தாவீதும் கிபியாவுக்குத் திரும்பியபோது, அந்தப் பெண்கள் தாவீதின் மாபெரும் வெற்றியைப் புகழ்ந்து ஒரு பாடலைப் பாடினர். ஆனால், தாவீதுக்கு இப்படி ஆதரவு கொடுத்தது சவுலுக்குக் கோபத்தை வரவழைத்தது. "அந்த வார்த்தை சவுலுக்கு விசனமாயிருந்தது; அவன் மிகுந்த எரிச்சலடைந்து, தாவீதைப் புகழ்ந்து மக்கள் பாடிய பாடல் அவனுக்கு எரிச்சலைக் கொடுத்தது, அந்நாள் முதற்கொண்டு சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான்" என்று 18:8,9 கூறுகிறது.

> எனவே பெரும்பாலும் தாவீது மற்றும் கோலியாத்தின் கதை பொதுவாக தாவீதின் வெற்றி கதையாக சொல்லப்படுகிறது, ஆனால் உண்மையில், இது சவுலின் தோல்வி கதையாகும். இஸ்ரவேல் ஜனங்கள் ஏன் சவுலை ராஜாவாக தேர்ந்தெடுத்தார்கள் என்பதை நாம் கண்டுபிடிக்கும்போது, அவரது அந்தஸ்தைப் பற்றி ஒரு பெரிய விஷயம் கூறப்படுகிறது. அவர் மற்றவர்களை விட குறைந்தபட்சம் ஒரு தலை உயரமானவர். எனவே, இந்த பெரிய பெலிஸ்தன் ஏலா பள்ளத்தாக்கில் வெளியே வந்து தேவனுடைய படைகளை எதிர்க்கும்போது, அவனுடன் சண்டையிட வேண்டிய இயற்கையான, தர்க்கரீதியான நபர் சவுல் ஆவார், ஏனென்றால் அவர் மற்ற அனைவரையும் விட பெரியவர். ஆனால், சவுல் சண்டையிட மறுக்கிறார். அதனால் இங்கே தாவீது வருகிறார். தாவீது தனது கவசத்தைப் பயன்படுத்த சவுல் அனுமதிக்கிறார், ஆனால் தாவீது அதை அணிந்துகொண்டவுடன் அது மிகப் பெரியது என்று அவர் கண்டுபிடிக்கிறார், எனவே சவுல் ஒரு தாராளமானவர் அல்ல என்பது புரிகிறது. "சரி, நீ என் கவசத்தை அணிந்து கொண்டு வெளியே சென்று கோலியாத்துடன்

**சண்டையிட்டால், ஒருவேளை நான் தான் அதைச் செய்கிறேன் என்று மக்கள் நினைப்பார்கள்" என்று காட்ட முயன்றார். ஆனால் தாவீது அந்த அடையாளத்தை உதிர்க்கிறார். சாமுவேலின் புத்தகங்கள் முழுவதும் ஆடை ஒரு பெரிய விஷயமாக இருக்கிறது. இது எப்போதும் அடையாளத்துடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஆகையால், தாவீது சவுலின் போராயுதவர்க்கத்தை மட்டுமல்ல, ஒரு மேய்ப்பனின் கருவிகளை மாத்திரமே வைத்திருந்த தன் அடையாளத்தையும் மறுக்கிறார். ஆகையால், தேவனை நிந்திக்கிற இந்த விருத்தசேதனமில்லாத பெலிஸ்தனை எதிர்க்க உயரமான, பலமான, ஆயுதமேந்திய ராஜாவைவிட தேவன் உதவி செய்கிற ஒரு மேய்ப்பனின் கருவிகள் இஸ்ரவேல் ராஜாவுக்கு மேன்மையானவை. எனவே, அந்த கதையின் முக்கியத்துவம் என்னவென்றால் தேவனை விட தன்னை முழுமையாக சார்ந்திருத்தல் உண்மையில் உலகின் பார்வையில் ஒரு நல்ல தலைவராக இருப்பதற்கான அனைத்து தகுதிகளையும் கொண்டிருப்பது போல் தோன்றலாம்.**

**– Prof. ஜெஃப்ரி ஏ. வோல்க்மர்**

18:10-19:17 இல் சவுலின் ஆரம்ப விரோதத்திலிருந்து அவரது மறைமுக விரோதத்திற்கு நாம் செல்லும்போது நாடகத்தின் தீவிரம் உயர்கிறது. இந்த அத்தியாயங்களில் உள்ள அனைத்து செயல்களும் முதன்மையாக கிபியா நகரத்தில் நிகழ்கின்றன, அங்கு சவுல் மற்றவர்கள் மூலம் தாவீதைக் கொல்ல முயன்றார். இந்த வசனங்கள் நான்கு நேரடியான அத்தியாயங்களாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவதாக, 18:10-16 இல், சவுல் தாவீதைத் தாக்குதல்களுக்கு அனுப்புவதன் மூலம் தாவீதின் மரணத்தைத் தேடினார். இந்தத் தாக்குதல்களில் தாவீது மரித்துப்போவார் என்று சவுல் நம்பினார் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதே சமயத்தில், சவுல் தன் ஈட்டியை தாவீதின் மீது எறிந்தார் என்றும் வேதம் சொல்கிறது. ஆனால் தாவீதைக் கொல்ல சவுல் முயற்சி செய்தபோதிலும், தேவன் தாவீதை ஆசீர்வதித்தார். "கர்த்தர் அவனோடேகூட இருந்தபடியால், தாவீது தன் காரியங்களிலெல்லாம் புத்திமானாய் நடந்தான்" என்று 18:14 நமக்கு சொல்கிறது. தாவீதின் வெற்றிகளின் காரணமாக, சவுல் பொறாமை மற்றும் பயத்தின் சாபத்திற்கு ஆளானார். ஆனால் தேவன் தாவீதை மக்கள் போற்றும்படி ஆசீர்வதித்தார்.

இரண்டாவது அத்தியாயத்தில், 18:17-30 இல், சவுல் பெலிஸ்தர் மூலம் தாவீதின் மரணத்தை நாடினார். கிபியாவில் இருந்தபோது, சவுல் தன் மகள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மேராவுக்கு திருமணம் செய்து கொடுப்பதாக வாக்குறுதி அளித்ததன் மூலம் பெலிஸ்தருக்கு எதிராக இன்னும் மூர்க்கத்தனமாக செயல்படும்படி தாவீதை கவர்ந்திழுத்தார். பெலிஸ்தர்கள் தாவீதைக் கொன்று விடுவார்கள் என்று சவுல் எதிர்பார்த்தார். எனவே, தாவீது போரிலிருந்து வெற்றிகரமாக திரும்பியபோது, சவுல் மேராவை வேறொரு மனிதனிடம் கொடுத்திருந்தார். சவுல் மீண்டும் முயற்சி செய்தார். தாவீது போரிலிருந்து நூறு பெலிஸ்த நுனித்தோல்களோடு திரும்பி வந்தால் தன் இளைய மகள் மீகாளை தாவீதுக்கு திருமணம் செய்து கொடுப்பதாக வாக்குக் கொடுத்தார். அதில் வெற்றி பெற்ற தாவீது, 200 பெலிஸ்திய நுனித்தோல்களைக் கொண்டுவந்தார். நாம் எதிர்பார்த்தபடியே, தேவன் சவுலை மறுபடியும் பயமடையும்படிக்கு சபித்தார், தாவீதைப் பற்றிய அவரது பயம் தீவிரமடைந்தது. மீகாள் தாவீதை நேசித்ததை சவுல் பார்த்தார். "சவுலின் எல்லா ஊழியர்களையும் விட தாவீது அதிக புத்திமானாய் நடந்தார், அதனால் அவரது பெயர் மிகவும் கனம் பெற்றது" என்று 30 வது வசனத்தில் நமது ஆசிரியர் மேலும் கூறினார்.

மூன்றாவது அத்தியாயத்தில், 19:1-8 இல், சவுல் வெளிப்படையாக யோனத்தான் மற்றும் அவரது மன்றத்தின் ஊழியர்கள் மூலம் தாவீதைக் கொல்ல உத்தரவிட்டார். ஆனால் யோனத்தான் மறுத்தபோது தேவன் தாவீதை ஆசீர்வதித்தார். சொல்லப்போனால், தாவீது நிரபராதி என்றும், தாவீது செய்த ஒவ்வொன்றும் சவுலுக்கு எப்படிப் பிரயோஜனம் செய்தது என்பதையும் சுட்டிக்காட்டியதன் மூலம் யோனத்தான் தன் அப்பாவைக் கடிந்துகொண்டார். சவுல் தான் செய்த தவறை ஒத்துக்கொண்டு, தாவீதுக்கு எந்தக் கெடுதலும் செய்ய மாட்டேன் என்று பொய் சத்தியம் செய்தார். "தாவீது வெளியே சென்று பெலிஸ்தரோடே போரிட்டு, அவர்களை ஒரு மகா சங்காரம் பண்ணினார், அதனால் அவர்கள் அவருக்கு முன்பாக ஓடிப்போனார்கள்" என்று 19:8 இல், நமது ஆசிரியர் கூறினார்.

தாவீதுக்கு எதிரான சவுலின் மறைமுக விரோதத்தின் நான்காவது மற்றும் இறுதி அத்தியாயத்தில், 19:9-17 இல், சவுல் தூதர்கள் அல்லது கொலையாளிகள் மூலம் தாவீதின் உயிரைத் தேடினார். "கர்த்தரால் விடப்பட்ட ஒரு தீங்கு விளைவிக்கும் ஆவி சவுலின் மீது இறங்கியதால்" தேவனுடைய சாபம் மீண்டும் சவுலின் மீது விழுந்தது என்றும், மீண்டும், சவுல் தனது ஈட்டியால் தாவீதைக் கொல்ல முயன்றார்" என்றும் 9 வது வசனம் கூறுகிறது. ஆனால் தாவீது தன் வீட்டுக்கு ஓடிப்போனார். தாவீதைக் கொல்வதற்காக சவுல் அவருடைய வீட்டுக்கு ஆட்களை அனுப்பினார். ஆனால் தேவன் தாவீதை மறுபடியும் ஆசீர்வதித்தார், அப்போது தாவீதின் மனைவி மீகாள் இரவில் அவன் தப்பிக்க உதவினாள்.

மற்றவர்கள் தாவீதைக் கொல்ல சவுலின் முயற்சிகளில் கவனம் செலுத்திய பிறகு, 19:18-23:28 இல் தாவீதுக்கு எதிராக சவுலின் நேரடி விரோதத்தின் மூலம் ஏற்பட்ட விரிவாக்கத்திற்கு நமது ஆசிரியர் திரும்பினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த அதிகாரங்கள் தாவீதுக்கு தேவன் தந்த ஆசீர்வாதங்களையும், சவுல் மீது தேவன் தந்த சாபங்களையும் எடுத்துரைக்கின்றன, அதே நேரத்தில் சவுல் பல்வேறு இடங்களில் தாவீதைப் பின்தொடர்ந்தார்.

முதலாவதாக, சவுல் 19:18-24 இல் ராமாவில் தாவீதுக்கும் சாமுவேலுக்கும் எதிராக வந்தார். கிபியாவிலிருந்த சவுலின் கொலைகாரர்களிடமிருந்து தப்பிய பிறகு, தாவீது சாமுவேலின் சொந்த ஊரான ராமாவுக்கு ஒடிப்போனார். அங்கே சாமுவேல் தன்னுடைய வழிநடத்துதலின் கீழ் தீர்க்கதரிசிகளின் குழுவோடு வாழ்ந்து வந்தார். நடந்ததை தாவீது சாமுவேலிடம் சொன்னார். அதனால், அவர்கள் இருவரும் அருகிலிருந்த நாயோத்தில் அடைக்கலம் புகுந்தார்கள். முன்பு போலவே, தாவீதைக் கொல்ல சவுல் தூதர்களை அனுப்பினார், ஆனால் தேவனுடைய ஆவியானவர் தாவீதைப் பாதுகாப்புடன் வியத்தகு முறையில் ஆசீர்வதித்தார். மூன்று முறை சவுல் தூதர்களை அனுப்பினார், ஆனால் ஒவ்வொரு முறையும் ஆவியானவர் அவர்களை மிகவும் தடை செய்ததால் அவர்கள் தங்கள் பணியை நிறைவேற்ற முடியவில்லை. எனவே, விரக்தியால், சவுல் ராமாவிலிருந்த நாயோத்துக்குச் சென்றார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் சவுலை அவமானப்படுத்தி சபித்தார். தேவனுடைய வல்லமையால் திக்குமுக்காடிப்போன சவுல், தாவீதைக் கொல்வதற்குப் பதிலாகத் தன் ஆடைகளைக் களைந்துவிட்டு, தீர்க்கதரிசனம் உரைத்தார்.

இரண்டாவதாக, கிபியாவில் தாவீதுக்கும் யோனத்தானுக்கும் எதிராக சவுலின் நேரடி விரோதத்தை 20:1-42 இல் காண்கிறோம். தாவீது சாமுவேலை ராமாவில் விட்டுவிட்டு கிபியாவுக்குத் திரும்பினார், அங்கு அவர் யோனத்தானிடம் தான் குற்றமற்றவர் என்பதை தாழ்மையுடன் கூறினார். தேவன் தாவீதை மறுபடியும் யோனத்தானின் ஆதரவால் ஆசீர்வதித்தார். தாவீதைக் கொல்ல சவுல் இன்னும் விரும்புகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள அவர்கள் இருவரும் சேர்ந்து ஒரு வழியைக் கண்டுபிடித்தார்கள். தாவீதுக்கு உண்மையாக இருந்ததற்காக யோனத்தான் கொடூரமாக அவரைக் கடிந்துகொண்டார். தாவீது சாக வேண்டுமென்று யோனத்தானின் அப்பா விரும்பினார் என்பது யோனத்தானுக்குத் தெரியும். எனவே, யோனத்தான் தாவீதை தனது நீடித்த ஆதரவின் ஆசீர்வாதத்துடன் அனுப்பினார், 42 வது வசனத்தில், ”கர்த்தர் எனக்கும் உமக்கும், என் சந்ததிக்கும் உங்கள் சந்ததிக்கும் இடையில் சாட்சியாக என்றென்றைக்கும் இருப்பார்” என்றான்.

மூன்றாவதாக, 21:1–23:13 இல் தாவீதுக்கும் ஆசாரியர்களுக்கும் எதிராக சவுலின் ஆக்கிரமிப்பை பல அத்தியாயங்கள் மையமாகக் கொண்டுள்ளன. இந்தப் பகுதி கிபியாவிலிருந்து ஆசரிப்புக் கூடாரமும் அதன் ஆசாரியர்கள் இருந்த நோபுக்கும் தாவீது பயணம் செய்வதிலிருந்து தொடங்குகிறது. பல்வேறு திருப்பங்களுக்கிடையில், தாவீது பெலிஸ்தரின் காத், அதுல்லாம் குகை, மோவாபின் மிஸ்பே ஆகிய இடங்களுக்கும் சிறிது காலம் பயணம் செய்தார்.

கடைசியில், யூதாவிலுள்ள கேகிலா என்ற ஊரில் தேவனுடைய பிரதான ஆசாரியரிடம் கொஞ்ச காலம் தங்கினார்.

தாவீது நோபில் இருந்த கூடாரத்திற்கு வந்தபோது, பிரதான ஆசாரியனாகிய அகிமெலேக்கிடம் தனக்கும் தன் ஆட்களுக்கும் அப்பம் கேட்டான். கூடாரத்தில் கர்த்தருக்கு முன்பாக வைக்கப்பட்ட பரிசுத்த அப்பத்தைத் தவிர வேறு எந்த அப்பமும் இல்லை என்று அகிமெலேக்கு விளக்கினார். அகிமெலேக்குக்கு தாவீது அளித்த பதில், இந்த நேரத்தில் தாவீதுக்கு தேவன் அளித்த ஆசீர்வாதத்தை விளக்கியது. “வாலிபருடைய அசம்பிகளும் சுத்தமாயிருக்கிறது; இன்றையதினம் வேறே அப்பம் பாத்திரத்தில் பிரதிஷ்டைபண்ணப்பட்டதினால், இது சாதாரணமாயிற்றே” என்று தாவீது வசனம் 5 இல் கூறுகிறார். அகிமெலேக்கு தாவீதுக்கு அன்று மீதியான பரிசுத்த அப்பத்தைக் கொடுத்தான். அதுமட்டுமல்ல, தாவீது ஒரு ஆயுதத்தைக் கேட்டபோது, அகிமெலேக்கு அவனிடம் கோலியாத்தின் பட்டயத்தைக் கொடுத்தான், இது தாவீதை தேவன் அங்கீகரித்ததற்கு பொருத்தமான அடையாளமாகும்.

இந்தக் கதைகள் முழுவதும், சாமுவேலின் ஆசிரியர் தாவீது என்ன செய்தார் என்பதைப் பற்றிய மதிப்பீட்டில் தனது வாசகர்களை வழிநடத்த நுட்பமான தடயங்களை எவ்வாறு அடிக்கடி கொடுத்தார் என்பதைப் பார்க்க நாம் கவனமாக இருக்க வேண்டும். மேலோட்டமாக, தாவீது பரிசுத்த அப்பத்தை சாப்பிடுவது கேள்விகளை எழுப்பியது, ஏனெனில் லேவியராகமம் 24:5-9 ஆரோனின் குமாரர்கள் பரிசுத்த அப்பத்தை சாப்பிடும்படி கட்டளையிடுகிறது. எனவே, அந்த நபர்களின் பரிசுத்தத்தையும் தாவீது கோலியாத்தின் பட்டயத்தைப் பெற்றதையும் ஆசிரியர் குறிப்பிட்டது சிறிய விஷயம் அல்ல. இந்த நுட்ப விவரங்கள் சவுலின் உண்மைப் பற்றுறுதிக்கு நேர்மாறாக, தாவீது தேவனிடம் கொண்டிருந்த உண்மைப் பற்றுறுதியை சிறப்பித்துக் காட்டின, மேலும் இந்தச் சமயத்தில் தாவீதை தேவன் அங்கீகரித்ததை உறுதிப்படுத்தின. அப்படியானால், லூக்கா 6:3 இல் இயேசு இந்த நிகழ்வைக் குறிப்பிட்டதில் ஆச்சரியமில்லை, ஏனெனில் அவர் தம்முடைய சீஷர்களை தானியங்களைச் சேகரிப்பதன் மூலம் ஓய்வுநாளை மீறினார்கள் என்ற தவறான குற்றச்சாட்டுக்கு எதிராக பாதுகாத்தார். தாவீதின் செயல்களை அவர்கள் எவ்வாறு மதிப்பிட வேண்டும் என்பதை அசல் வாசகர்கள் புரிந்துகொள்ள உதவும் இது போன்ற நுட்பமான குறிப்புகள் இந்த அத்தியாயங்கள் முழுவதும் தோன்றுகின்றன.

அக்காலத்தில் நோபிலிருந்த சவுலின் மேய்ச்சல்காரர்களில் தலைவனாக இருந்த தோவேக்கு என்னும் ஏதோமியன் ஒருவன் இருந்தான். தாவீது இருக்கும் இடத்தை சவுலுக்குத் தெரிவிப்பான், என்பதை அறிந்த தாவீது தப்பி ஒடிப்போனார். அவர் பெலிஸ்திய நகரமான காத்துக்குச் சென்றார், அங்கு ஒரு பைத்தியக்காரனைப் போல நடந்துகொள்வதன் மூலம் ராஜாவை ஏமாற்றவும் - தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தேவன் அவருக்கு

ஞானத்தைக் கொடுத்தார். பின்னர் அவர் அதுல்லம் குகைக்குச் சென்றார், அங்கு தேவன் சுமார் 400 போர் வீரர்களைக் கொண்ட ஒரு குழுவுடன் அவரை ஆசீர்வதித்தார். ஆனால், தன்னால் முடிந்த ஒவ்வொருவரையும் கட்டாய இராணுவ சேவையில் ஈடுபடுத்திய சவுலைப் போல் தாவீது இந்தப் போராளிகளை கட்டாய இராணுவ சேவையில் சேர்க்கவில்லை. அவர்கள் அனைவரும் தாமாக முன்வந்து அவரிடம் வந்தனர். மோவாபின் மிஸ்பாவில் தன் தாயையும் தகப்பனையும் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதன் மூலமும் தாவீது தேவனுடைய ஆவியின் ஆசீர்வாதத்தை நிரூபித்துக் காட்டினார். யூதாவுக்குப் போகும்படி காத் தீர்க்கதரிசி தன்னிடம் சொல்லும்வரை அவர் அங்கேயே இருந்தார், மேலும் அவர் தாழ்மையுடன் தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்தார்.

இவை எல்லாவற்றின் போதும், சவுலின் மீது பொல்லாத ஆவியின் சாபம் தெளிவாகத் தெரிந்தது. தனக்கு ஆதரவளிக்காததற்காக சவுல் கிபியாவில் தன்னுடைய ஆட்கள்மீது கோபம் கொண்டார். எனவே, ஏதோமியனாகிய தோவேக்கு தாவீது நோபில் இருப்பதாக சவுலிடம் கூறினான். ஆனால் தாவீது ஏற்கெனவே போய்விட்டதையும், அகிமெலேக்கு தனக்கு உதவி செய்ததையும் சவுல் அறிந்தபோது, அவர் கோபமடைந்து, எல்லா ஆசாரியர்களையும் கொல்லும்படி தோவேக்குக்குக் கட்டளையிட்டார். 22:18 இல் நாம் வாசிக்கிறபடி, ”ஏதோமியனாகிய தோவேக்கு திரும்பி, ஆசாரியர்களை வெட்டி வீழ்த்தினான், சணல்நூல் ஏபோத் தரித்த எண்பத்தைந்து பேரை அந்நாளிலே கொன்றுபோட்டான்.” பின்பு சவுல் நோபில் இருந்த பெண்கள், பிள்ளைகள் உட்பட எல்லா ஆட்களையும் மிருகங்களையும் அழித்தான். அகிமெலேக்கின் குமாரர்களில் ஒருவனான ஆசாரியன் அபியத்தார் மட்டும் தப்பித்து, தாவீதுடனும் அவருடைய ஆட்களோடும் சேர்ந்துகொண்டான்.

பெலிஸ்தர் கேகிலா மக்களை தொந்தரவு செய்கிறார்கள் என்ற செய்தி தாவீதுக்கு கிடைக்கும் வரை தாவீதும் அபியத்தாரும் யூதாவுக்குள் ஒன்றாக பயணம் செய்தனர். சவுலுக்கு நேர்மாறாக, தாவீது கர்த்தரிடம் அவர் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார். பெலிஸ்தரிடமிருந்து கேகிலாவைக் காப்பாற்ற வேண்டும் என்று தேவன் பதிலளித்தார். தேவன் தாவீதை வெற்றியினால் ஆசீர்வதித்தார். இதற்கிடையில், சவுல் கேகிலாவுக்கு வருகிறான் என்பதை அபியத்தாருக்கு வெளிப்படுத்துவதன் மூலம் தேவன் தாவீதை ஆசீர்வதித்தார். எனவே, தாவீது ஆசாரியனை அழைத்து வழிநடத்துதலுக்காக மீண்டும் ஒரு முறை ஜெபித்தார். தாவீது வெளியேற வேண்டும் என்று அவர் வெளிப்படுத்தினார், சவுலும் அவரது இராணுவமும் திரும்பிச் சென்றனர்.

சவுலின் நேரடி விரோதத்தின் நான்காவது மற்றும் கடைசி பகுதி 23:14-28 இல் வனாந்தரத்தில் தாவீதுக்கு எதிராக ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட பல ஆக்கிரமிப்புகளை உள்ளடக்கியது. கேகிலாவை விட்டுப் புறப்பட்ட பிறகு, தாவீது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சீப் வனாந்தரத்துக்கும், பின்னர் மாகோன் வனாந்தரத்தின் தெற்குப் பகுதிக்கும் சென்றார், அங்கு சவுல் மறுபடியும் அவரைப் பின்தொடர்ந்தார்.

இந்த பகுதியின் தொடக்கத்தில் சவுல் மீது தீய ஆவியின் சாபம் மற்றும் தாவீதின் மீது தேவனுடைய ஆசீர்வாதம் ஆகிய இரண்டையும் குறிப்பிடுகிறது. சவுல் இடைவிடாமல் தாவீதைப் பின்தொடர்ந்தார் என்று நமக்குச் சொல்லப்படுகிறது, ஆனால் தாவீதைப் பிடிக்க தேவன் ஒருபோதும் அனுமதிக்கவில்லை. 23:17 இன் படி, யோனத்தான் தாவீதிடம் வந்து, ”நீர் பயப்பட வேண்டாம், என் தகப்பனாகிய சவுலின் கை உம்மைக் கண்டுபிடிக்க முடியாது. நீ இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிருப்பீர்” என்று அவருக்கு உறுதியளித்தார்.

இதற்கிடையில் சீப் வனாந்தரத்திலிருந்து சிலர் சவுலை தாவீதிடம் அழைத்துச் செல்ல முன்வந்தனர். எனவே, தாவீதும் அவருடைய ஆட்களும் தெற்கே மாகோன் வனாந்தரத்திற்குப் போனார்கள். சவுல் தாவீதைக் கைப்பற்றுவதற்கு நெருக்கமாக வந்தார், ஆனால் சவுல் தாவீதை நெருங்கியபோது, தேவன் தாவீதை மீண்டும் ஒருமுறை ஆசீர்வதித்தார். பெலிஸ்தர் வேறு இடங்களில் இஸ்ரவேலரைத் தாக்குகிறார்கள் என்ற செய்தி சவுலுக்குக் கிடைத்தது. அதனால், சவுல் தன் துரத்தலிலிருந்து விலகி அவர்களோடு போரிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

**பகைமையைத் தணித்தல் (23:29–27:12).** தாவீதுக்கு எதிரான சவுலின் பகைமையின் தொடக்கத்தையும் விரிவாக்கத்தையும் கண்ட பிறகு, 23:29–27:12 இல் சவுலின் பகைமையின் தணிவை நாம் தொட வேண்டும். தாவீதின் உத்தமத்தன்மை தாவீதை சமாதானத்தில் வாழ சவுலை எவ்வாறு வழிநடத்தியது என்று இந்த காரியங்கள் வெளிப்படுத்துகின்றன.

முதல் பகுதி 23:29–24:22 இல் என்கேதியில் தாவீதின் நன்கு அறியப்பட்ட அத்தியாயமாகும். பெலிஸ்தருடன் போரிட சவுல் புறப்பட்ட பிறகு, தாவீது கிழக்கு நோக்கி என்கேதி என்று அழைக்கப்பட்ட இடத்திற்குச் சென்றார். ஆனால் சவுலின் போர் முடிந்த பிறகு, அவர் மறுபடியும் தாவீதைப் பின்தொடர்ந்தார். வழியில், சவுல் ஒரு குகையில் ஒய்வெடுப்பதற்காக நின்றார். தேவனின் தயவால், தாவீது அதே குகைக்குள் ஒளிந்து கொண்டிருந்தார். தாவீது சவுலை எளிதாகக் கொன்றிருக்க முடியும், ஆனால் அதற்கு பதிலாக, அவர் சவுலின் அங்கியின் ஒரு மூலையை மட்டுமே வெட்டினார். தாவீதின் மனசாட்சி பாவம் செய்வதில் எந்தளவு உணர்வுள்ளதாக இருந்தது என்பதைக் காட்டுவதற்காக, கர்த்தரால் அபிஷேகம் செய்யப்பட்ட ராஜாவுக்கு எதிரான இந்த சிறிய செயலைக் கூட தாவீது குற்றவுணர்ச்சியில் உணர்ந்தார் என்று நம் ஆசிரியர் சுட்டிக்காட்டினார். அதனால், அடுத்த நாள் காலையில், தூரத்திலிருந்தே தாவீது சவுலைக் கூப்பிட்டார். தான் சவுலின் உயிரைக் காப்பாற்றியதாகவும், அவனுக்கு எந்தத் தீங்கும் செய்ய மாட்டேன் என்றும் தெளிவுபடுத்தினார். பின்னர், குறிப்பிடத்தக்க தெளிவின் ஒரு சுருக்கமான தருணத்தில், சவுல் 24:17 இல் தாவீதிடம் ”நீ என்னைப்பார்க்கிலும் நீதிமான்; நீ எனக்கு நன்மை செய்தாய்;



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நானோ உனக்கு தீமைசெய்தேன்" என்று கூறினார். "நீ நிச்சயமாக ராஜாவாய் இருப்பாய் என்றும், இஸ்ரவேலின் ராஜ்யபாரம் உன் கையில் நிலைவரப்படும் என்றும் அறிவேன்" என்று சவுல் 24:20 இல் தாவீதிடம் கூறினார்.

இரண்டாவது பகுதியில், 25:1-44 இல் பாரான் வனாந்தரத்தில் தாவீதுக்கும் அபிகாயிலுக்கும் என்ன நடந்தது என்பதை நமது ஆசிரியர் விவரித்தார். இந்த அத்தியாயத்தில் சவுல் குறிப்பிடப்படவில்லை, ஆனால் சாமுவேல் இறந்துவிட்டார் என்ற அறிவிப்புடன் நமது ஆசிரியர் தொடங்கினார், எல்லா இஸ்ரவேலரும் அவருக்காக துக்கம் கொண்டாடினர். தற்காலிக போர் நிறுத்த உடன்படிக்கையின் கீழ் தாவீதும் சவுலும் சாமுவேல் அடக்கம் செய்யப்பட்டபோது உடனிருந்தார்கள் என்பதைக் காட்டவே அவர் இதைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இந்த உண்மை, சவுலின் பகைமை எவ்வாறு தணிந்துகொண்டிருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. ஆனால் தாவீது உடனடியாக சவுலிடமிருந்து வெகு தூரத்திலிருந்த தெற்கு யூதாவின் வனாந்தரங்களுக்கு, அதாவது பாரான் வனாந்தரத்திற்கு ஓடிப்போனார். அங்கு, தாவீதின் செயல்கள் அவர் குற்றமற்றவர் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது.

அபிகாயில் என்ற அழகான, புத்திசாலியான பெண்ணைப் பற்றியும், கொடூரமான, பொல்லாத அவளுடைய கணவன் நாபாலைப் பற்றியும் நாம் கேள்விப்படுகிறோம். நாபாலின் பெயரின் அர்த்தம் "முட்டாள்" என்பதாகும். தாவீதின் ஆட்கள் நாபாலின் மேய்ப்பர்களை நன்றாக நடத்தி, வனாந்தரத்தில் அவர்களைப் பாதுகாத்த பிறகு, தன்னுடைய ஆட்களுக்கு உணவளிக்கும்படி நாபாலிடம் தாவீது கேட்டார். ஆனால், தாவீதின் வேண்டுகோளை நாபால் முட்டாள்தனமாக ஏற்க மறுத்து, தன்னுடைய ஆட்களை அவமானப்படுத்தியபோது, நாபாலின் குடும்பத்தாரைத் தாக்குவதற்கு தாவீது தன்னுடைய ஆட்களைத் தயார்படுத்தினார். தன் கணவருக்காக அபிகாயில் தலையிட்டு, தாவீதிடம் ஒரு பரிசைக் கொடுத்து, தன் கணவருக்காக மன்னிப்பு கேட்கிறாள். தாவீதின் நற்குணத்தையும் மனத்தாழ்மையோடு புரிந்து கொண்டாள். தாவீது பழிவாங்காதபடிக்கு தேவனைத் துதித்தார். ஏறக்குறைய பத்து நாட்களுக்குப் பிறகு, கர்த்தரே நாபாலை அடித்துக் கொன்றார். நாபாலின் மரணச் செய்தியை தாவீது கேட்டபோது, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம். தம் அடியானை அநியாயம் செய்யாதபடி தடுத்தார்" என்று அவர் 39 வது வசனத்தில் பதிலளித்தார். சீக்கிரத்திலேயே, அபிகாயில் தாவீதுக்கு மனைவியானபோது தேவன் தாவீதை மேலுமதிகமாக ஆசீர்வதித்தார்.

> **அபிகாயிலின் கணவனாக இருந்த நாபாலின் குடும்பத்தாருக்கு தாவீது நிறைய நல்லது செய்தார். தாவீதுக்கும் அவனுடைய படைக்கும் உணவு கொடுக்கும் விஷயத்தில் நாபால் பெருந்தன்மையைக் காட்டுவான் என்று தாவீது எதிர்பார்த்தார். ஆனால், தாவீது நாபாலிடம் ஆட்களை அனுப்பியபோது, நாபால் தாவீதுக்கு உணவு**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> கொடுக்க மறுத்துவிட்டான். அதனால், நாபாலைப் பழிவாங்க முடிவு செய்தார்… நாபாலையும் அவனுடைய குடும்பத்தாரில் சிலரையும் அழித்துப்போட முடிவு செய்தார். இப்போது, ஒரளவுக்கு இதுதான் நடந்திருக்கிறது என்பதை அபிகாயில் புரிந்துகொண்டாள். உடனே தாவீதைச் சந்திக்க சில உணவுப் பொருட்களுடன் ஏற்பாடு செய்தாள். அபிகாயில் ஒரு பழிவாங்கும் பணியில் இருந்த தாவீதை சந்தித்தபோது மனத்தாழ்மையுடன், பழிவாங்க வேண்டாம் என்று தாவீதை சமாதானப்படுத்த முடிந்தது. அந்த நேரத்தில் தாவீது அவள் பேச்சைக் கேட்டார், அதன் விளைவாக அவள் கொண்டு வந்த ஒரு பரிசை தாவீது ஏற்றுக்கொண்டார், அபிகாயில் திரும்பி வந்தாள்… எனவே, சில நாட்களுக்குப் பிறகு தேவன் நாபாலைத் தாக்கினார், நாபால் இறந்தார். அபிகாயில் இப்போது ஒரு விதவையாக இருக்கிறாள் என்று தாவீது கேள்விப்பட்டபோது, அவளை மணந்து கொள்ள அபிகாயிலிடம் ஆட்களை அனுப்பினார். தாவீதைத் திருமணம் செய்துகொள்ள அபிகாயில் சம்மதித்தாள். அப்படித்தான் தாவீது அபிகாயிலை மணந்தார். என்னைப் பொறுத்தவரை, பழிவாங்குதல் நமக்கானது அல்ல என்பதுதான் எனக்கு அங்கே கிடைத்த பாடம்… பழிவாங்குதல் கர்த்தருக்கே உரியது.
>
> **– Rev. Dr. ஹும்பிரெ அகோக்யெரம்**

26:1-25 இல் இரண்டாவது முறையாக சீப் வனாந்தரத்தில் தாவீதிடம் ஆசிரியர் திரும்பினார். சவுல் மறுபடியும் தாவீதைப் பின்தொடர்ந்தார். ஆனால் தாவீது குற்றஞ்செய்யவில்லை. ஒருநாள் ராத்திரி, சவுலின் முகாமுக்குள் தாவீது போனார். அப்போது, சவுல் ஈட்டியைத் தலையில் வைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தார். முன்புபோலவே, சவுலுக்கு எந்தக் கெடுதலும் செய்ய தாவீது மறுத்துவிட்டார். ஆனால், சவுலின் ஈட்டியையும் தண்ணீர்க் குடத்தையும் எடுத்துக்கொண்டார். மறுநாள், தாவீது தன்னை கட்டுப்படுத்தியதற்காக தேவன் அவரை ஆசீர்வதித்தார். தாவீதும் சவுலும் தூரத்திலிருந்து பேசியபோது, சவுல் தாவீது குற்றமற்றவர் என்பதை ஒப்புக்கொண்டு, 25 வது வசனத்தில் தாவீதை ”என் குமாரனாகிய தாவீதே, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவன்! நீ பல காரியங்களைச் செய்வாய், அவற்றில் மென்மேலும் வெற்றி பெறுவாய்” என்று சொல்லி ஆசீர்வதித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சவுலின் பகைமையின் கடைசிப் பகுதி 1 சாமுவேல் 27:1-12 இல் பெலிஸ்தியாவில் தாவீதைக் கையாள்கிறது. தாவீது மறுபடியும் சவுலிடமிருந்து தப்பி ஒடிப்போனார். இந்தத் தடவை பெலிஸ்தரின் தேசத்துக்குப் போனார். தாவீது காத் பட்டணத்துக்கு ஒடிப்போனதைக் கேள்விப்பட்ட பிறகு, சவுல் அவரைப் பின்தொடர்வதை நிறுத்திவிட்டதால், தாவீதின் தீர்மானத்தை தேவன் ஆசீர்வதித்தார் என்பது தெளிவாகத் தெரிகிறது. தேவன் தாவீதை வேறு வழிகளிலும் ஆசீர்வதித்தார். பெலிஸ்திய அரசனான ஆகீஸ், தாவீதின் சிக்லாகு நகரைத் தன் தங்குமிடமாகக் கொடுத்தான். தாவீது ஒரு வருடம் மற்றும் நான்கு மாதங்கள் சிக்லாகில் வாழ்ந்தார் மற்றும் அங்கிருந்து பல வெற்றிகரமான தாக்குதல்களை வழிநடத்தினார். தாவீது தேவனுடைய மக்களில் யாருக்கும் எந்தக் கெடுதலும் செய்யவில்லை என்பதை நம் ஆசிரியர் கவனமாகச் சுட்டிக்காட்டினார். மாறாக, தேவனுடைய எதிரிகளைத் தாக்க பெலிஸ்தருக்கு மட்டுமே அவர் உதவினார். இருந்தாலும், இஸ்ரவேலர்கள் தாவீதை வெறுக்கிறார்கள் என்றும், வாழ்நாள் முழுவதும் தாவீதுக்கு உண்மையாக இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றும் நினைத்து, ஆகீஸ் தாவீதை நம்பினான்.

**பகைமையின் பின் விளைவுகள் (1 சாமுவேல் 28:1–2; சாமுவேல் 1:27).** தாவீதுக்கு எதிரான சவுலின் ஆக்கிரமிப்பின் பின்னணி மற்றும் விரிவாக்கம் ஆகியவற்றைக் கையாண்ட பிறகு, சாமுவேலின் ஆசிரியர் 1 சாமுவேல் 28: 1-2 சாமுவேல் 1:27 இல் சவுலின் விரோதத்தின் பின்விளைவுகளுக்கு திரும்பினார். இந்த அத்தியாயங்களில், பெலிஸ்தர்கள் இஸ்ரவேலுக்கு எதிராக போர் செய்தனர், இந்த நேரத்தில்ள் தேவன் தாவீதை எவ்வாறு ஆசீர்வதித்து சவுலுக்கு எதிராக சாபங்களைக் கொண்டு வந்தார் என்பதில் நமது ஆசிரியர் கவனம் செலுத்தினார்.

சவுலின் பகைமையின் முதல் பகுதி 28: 1-25 இல் பெலிஸ்தியருடனான போருக்கான ஆயத்தங்களில் கவனம் செலுத்துகிறது. சாமுவேல் புத்தகத்தின் ஆசிரியர், தன்னுடைய வழக்கமான பாணியிலிருந்து விலகி, தாவீதும் சவுலும் சம்பந்தப்பட்ட இரண்டு சம்பவங்களை இடைச்செருகல் செய்து, இந்தச் சம்பவங்கள் ஒரே சமயத்தில் நடந்ததைக் காட்டுகிறார்.

முதலாவதாக, 28:1,2 இல் தாவீதின் போருக்கான ஆயத்தங்களின் சுருக்கமான அத்தியாயத்தைக் காண்கிறோம். இந்த நிகழ்ச்சிகள் பெலிஸ்திய நகரமாகிய காத்தில் நடந்தன. இஸ்ரவேலுக்கு எதிரான போரில் தாவீதும் அவனுடைய ஆட்களும் பெலிஸ்தரின் படையோடு சேர்ந்து கொள்ள வேண்டும் என்று பெலிஸ்திய ராஜா தாவீதிடம் சொன்னான். தாவீது ஆகீசுக்கு இந்த திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக காட்டி அவரை ஏமாற்றினார். சந்தோஷமடைந்த ஆகீஸ், தாவீதிடம் தான் வாழ்நாள் முழுவதும் ராஜாவின் மெய்க்காப்பாளனாக இருப்பேன் என்று சொன்னான். சாமுவேலின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

புத்தகத்தின் ஆசிரியர் பெலிஸ்தருடன் தாவீது பங்கேற்றதால் ஏற்பட்ட பதற்றத்தைத் தீர்க்க பிற்பாடு ஒரு அத்தியாயம் வரை காத்திருந்தார்.

இரண்டாவதாக, 28:3-25 இல் சவுலின் போருக்கான ஆயத்தங்களுக்கு நமது ஆசிரியர் திரும்பினார். சாமுவேலின் நாட்களில், சவுல் இஸ்ரவேலிலிருந்து அனைத்து ஊடகங்களையும் அகற்றினார். ஆனால் பெலிஸ்தரின் படை சவுலைப் பயமுறுத்தியது. அவர் தேவனிடத்தில் விசாரித்தான், தேவன் அவருக்குப் பதிலளிக்கவில்லை. எனவே, சவுல் நினைத்துப் பார்க்க முடியாததைச் செய்தார். அவர் ஒரு அஞ்சனம் பார்க்கிறவளுடன்  கலந்தாலோசித்தார். லேவியராகமம் 20:27 மோசேயின் நியாயப்பிரமாணத்தில் மரித்தோரைக் கலந்தாலோசித்தால் மரண தண்டனை என்று சுட்டிக்காட்டுகிறது. ஆனால் சவுல் சாமுவேலை வரவழைக்கும்படி எந்தோரின் கட்டளையிட்டார். தோன்றிய ஆவி உண்மையில் சாமுவேலாக இருந்தாலும் சரி அல்லது பிசாசுகளின் ஏமாற்றுத்தனமாக இருந்தாலும் சரி, அந்த ஆவி சவுலிடம் தான் கேட்க விரும்பிய கடைசி காரியத்தை சொன்னது. 17 ஆம் வசனத்தில், ”கர்த்தர் ராஜ்யத்தை உன் கையிலிருந்து பிடுங்கி, உன் அயலானாகிய தாவீதுக்கு ஒப்புக்கொடுத்தார்” என்று ஆவி சாமுவேலின் முந்தைய வார்த்தைகளை மீண்டும் சொன்னது. “கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார்; நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்; இஸ்ரவேலின் பாளயத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார்” அந்த ஆவி வசனம் 19 இல் கூறியது. பெலிஸ்தருடன் நடந்த போரில் தேவன் சவுலுக்கும் அவரது குமாரர்களுக்கும் மரண தண்டனை விதித்தார்.

இந்த பகுதியின் அடுத்த பகுதி 29:1–31:13 இல் பெலிஸ்தருடனான போரில் தாவீதும் சவுலும் செய்த ஈடுபாடுகளில் கவனம் செலுத்துகிறது. 29:1-30:31 இல் உள்ள விவரிப்பு தாவீதின் வெற்றிகளை முன்வைக்கிறது. 28:1 இல் பெலிஸ்திய ராஜாவாகிய ஆகீஸ், தாவீது தன்னோடு சேர்ந்து இஸ்ரவேலோடு போரிட வேண்டும் என்று வற்புறுத்தியதை நீங்கள் நினைவுகூரலாம். ஆனால் இந்த அதிகாரங்களில், பெலிஸ்தரின் தளபதிகள் தாவீதை தங்களுடன் சேர அனுமதிக்க மறுத்துவிட்டனர். எனவே, தாவீது சிக்லாகுக்குத் திரும்பினார், சவுலுக்கு எதிராக ஒருபோதும் போருக்குச் செல்லவில்லை. தாவீது சிக்லாகுக்குத் திரும்பி வந்தபோது, அமலேக்கியர் நகரத்தைத் தீக்கிரையாக்கியதையும் அவருடைய மனைவிகளைச் சிறைப்பிடித்துச் சென்றதையும் கேள்விப்பட்டார். தாவீது அமலேக்கியரைத் தாக்கி அவர்கள் ஒவ்வொருவரையும் அழித்தார். முன்பு சவுல் அதை செய்ய மறுத்துவிட்டார். தேவனுடைய மக்களின் மதிப்புமிக்க தலைவராக செயல்பட்டு, தாவீது போரில் கொள்ளையடித்த பணத்தை தன்னைப் பின்பற்றிய அனைவருடனும் பகிர்ந்து கொண்டார்.

இதற்கு நேர்மாறாக, 31:1-13 இல் பெலிஸ்தருடனான போரில் சவுலின் மரணத்திற்கு நமது ஆசிரியர் திரும்பினார். கில்போவா மலையில், வரப்போவதாக தேவன் எச்சரித்த சாபங்களை ஊற்றினார். அந்தப் போரில் யோனத்தான் உட்பட சவுலின் மூன்று குமாரர்கள் இறந்துபோனார்கள். பின்னர், ஒரு வில்வீரனின் அம்பு சவுலைக் கடுமையாகக் காயப்படுத்திய பிறகு, "சவுல் தன் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்தான்" என்று 4 ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். சவுல் மற்றும் அவரது குமாரர்களின் உடல்களை பெத்சானின் சுவரில் கட்டி பெலிஸ்தர் அவமானப்படுத்தினர். ஆனால் தைரியசாலிகளோ கீலேயாத்திலுள்ள யாபேசிலிருந்து வந்து, இராத்திரியிலே போய், பிணங்களைக் கொண்டுபோய், எரித்து, அவர்களுடைய எலும்புகளைப் புதைத்தார்கள்.

சாமுவேலின் ஆசிரியர் 2 சாமுவேல் 1: 1-27 இல் போருக்குப் பிறகு தாவீதின் எதிர்வினைக்கு திரும்புவதன் மூலம் சவுலின் விரோதத்தின் பின்விளைவுகளைப் பற்றிய தனது கணக்கை முடித்தார். இந்தப் பகுதி, சவுலும் அவருடைய குமாரர்களும் சிக்லாகில் இருக்கிற தன் வீட்டுக்குத் திரும்பிய பின்பு அவர்களுடைய மரணத்துக்கு தாவீதின் நீதியான பிரதிபலிப்பை மையப்படுத்துகிறது.

முதலாவதாக, 1:1-16 இல், சவுலைக் கொன்றேன் என்று சொன்ன அமலேக்கிய தூதனை தாவீது கொன்றார். பின்னர், 1:17-27 இல், தாவீது யோனத்தான் மற்றும் சவுலின் மரணங்களைக் குறித்து பகிரங்கமாக புலம்பினார். 19 ஆம் வசனத்தில் அவர் சத்தமிட்டு, "இஸ்ரவேலின் அலங்காரம் உயர்ந்த ஸ்தானங்களில் அதமாயிற்று!" என்றார். 19, 25 மற்றும் 27 வசனங்களில், "பராக்கிரமசாலிகள் விழுந்தார்கள்!" என்ற பிரபலமான பல்லவியை மீண்டும் சொல்வதன் மூலம் அவர் சவுலையும் யோனத்தானையும் கௌரவப்படுத்தினார். நியாயமான காரணமின்றி சவுல் அவரைத் துன்புறுத்திய போதிலும், சவுலின் மனத்தாழ்மையான ஊழியராக தாவீது கடைசிவரை உத்தமத்தைக் காத்துக்கொண்டார்.

இப்போது சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை நாம் கருத்தில் கொண்டுள்ளோம், நமது வாழ்க்கைக்கான அதன் பயன்பாட்டைப் பற்றி கேட்கும் நிலையில் இருக்கிறோம். சாமுவேலின் புத்தகத்தின் இந்தப் பிரிவை நாம் எவ்வாறு கிறிஸ்தவப் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வது?

## கிறிஸ்தவ பயன்பாடு

சாமுவேலின் இரண்டாம் பிரிவின் பல அம்சங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாகிய நம் வாழ்க்கையிலிருந்து துண்டிக்கப்பட்டதாகத் தெரிகிறது. நாம் பெலிஸ்தருடனும் மற்ற பூர்வ மக்களுடனும் போர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

செய்யவில்லை. சவுலுக்கும் தாவீதுக்கும் இடையிலான போராட்டத்தில் நாம் ஈடுபடவில்லை. இந்த நிகழ்வுகளுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? நிச்சயமாக, நம்மில் பெரும்பாலோர் இங்கும் அங்கும் சில தொடர்புடைய இறையியல் மற்றும் தார்மீக கொள்கைகளைக் காணலாம். ஆனால் சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியைப் பற்றிய சாமுவேலின் முக்கிய நோக்கங்களின் ஆசிரியருடன் நமது கிறிஸ்தவ பயன்பாடுகளை இணைப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியின் கிறிஸ்தவ பயன்பாட்டை ஆராய பல வழிகள் உள்ளன. ஆனால் இங்கே நமது நோக்கங்களுக்காக, தேவனுடைய உடன்படிக்கைகள் மற்றும் தேவனுடைய ராஜ்யத்தின் கருப்பொருள்களை மீண்டும் ஒருமுறை பார்ப்போம். சாமுவேலினுடைய புத்தகத்தின் இந்த பிரிவை நோக்கி தேவனின் உடன்படிக்கைகள் நமக்கு ஒரு முக்கியமான நோக்குநிலையை எவ்வாறு கொடுக்கின்றன என்பதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

## தேவனுடைய உடன்படிக்கைகள்

சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியின் நிகழ்வுகள் தேவனுடனான இஸ்ரவேலின் தொடர்புகள் முதன்மையாக மோசேயுடன் தேவன் உண்டாக்கின உடன்படிக்கையால் நிர்வகிக்கப்பட்டபோது நடந்தன. மோசேயின் நியாயப்பிரமாணம் தேவனுடைய தயவுகள், நன்றியுள்ள உண்மைப் பற்றுறுதிக்கான தராதரங்கள் - குறிப்பாக ஆராதனை மற்றும் அரசுரிமைக்கான தேவனுடைய சட்டங்கள் மற்றும் சாபங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் விளைவுகள் ஆகியவற்றைப் பற்றி எழுதியதை கட்டுப்படுத்தியது. ஆனால், இந்தப் பாடத்தில் நாம் பார்த்தபடி, தேவன் தாவீதுடன் செய்த உடன்படிக்கையை தேவன் ஏற்படுத்திய பின்பு சாமுவேலின் புத்தகம் எழுதப்பட்டது. எனவே, தாவீதினுடைய வீட்டின் மையத்தைப் பற்றி தேவன் வெளிப்படுத்திய எல்லாவற்றின் வெளிச்சத்திலும் அன்றைய வாசகர்கள் இந்த அத்தியாயங்களை தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்துவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதேபோல், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நாம், சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியின் கதையை நம்முடைய நாளின் வெளிச்சத்தில் பொருத்த வேண்டும். தேவன் கிறிஸ்துவில் ஒரு புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்த பிறகு நாம் வாழ்கிறோம். இந்த புதிய உடன்படிக்கை தேவனுடைய முந்தைய உடன்படிக்கைகளின் இயக்கவியலை தாவீதின் பெரிய குமாரனாக இயேசுவின் மையத்தை நோக்கி மறுசீரமைக்கிறது. இந்த காரணத்திற்காக, இந்த அத்தியாயங்களைப் பயன்படுத்தும்போது நம்மை வழிநடத்த புதிய ஏற்பாட்டில் தேவனுடைய வெளிப்பாட்டை நாம் நம்ப வேண்டும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> **வேதத்தைப் படிக்கும்போது, வேதம் ஒரே நேரத்தில் நமக்கு வருவதில்லை என்பதை உணர வேண்டியது அவசியம். இது ஒரு தொடர்ச்சியான வெளிப்பாடு. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் உச்சக்கட்டத்தை அடைந்து, வேதாகம உடன்படிக்கைகள் மூலம் காலப்போக்கில் தம்முடைய திட்டத்தை நமக்கு வெளிப்படுத்த தேவன் முடிவெடுத்தார். இதை மனதில் கொண்டு, நாம் வேதத்தை நம் வாழ்க்கையில் பயன்படுத்தும்போது, வேதத்தின் அனைத்து அம்சங்களும் பழைய உடன்படிக்கையின் கீழ் அல்லது பழைய ஏற்பாட்டு சகாப்தத்தில் இருந்ததைப் போலவே நம்மிடம் வருவதில்லை என்பதை நாம் உணர வேண்டும். நமக்கு என்ன பொருந்துகிறது என்று நாம் சிந்திக்கும்போது, பழைய ஏற்பாடு குறிப்பாக இயேசு கிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேற்றமடைகிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். ”இது பொருந்தும், இது பொருந்தாது” என்று நாம் சொல்லும் கண்ணாடியாகவும் கட்டமாகவும் அவர் இருக்கிறார்... இவை அனைத்தும் கிறிஸ்துவில் அதன் நிறைவேற்றத்தை அடைகின்றன. அது அவருக்குள்ளும் அவர் மூலமாகவும் நமக்குப் பொருந்தும். வேதத்தின் எந்தப் பகுதியையும் நாம் வாசிக்கும்போது, அந்த பகுதியை மீட்கும் வரலாற்றில் அதன் இடத்தில் வைக்கும்போது, அது இயேசு கிறிஸ்துவில் எவ்வாறு நிறைவேற்றப்படுகிறது என்பதைப் பார்த்து, பின்னர் இயேசு செய்தவற்றின் வெளிச்சத்தில் வாழும் தேவனுடைய மக்களாக அது எவ்வாறு நம்மிடம் வருகிறது என்பதைப் பார்க்க வேண்டிய அடிப்படைக் கொள்கை இதுதான்.**
>
> **– Dr. ஸ்டீபன் ஜே. வெல்லம்**

முதலாவதாக, முந்தைய பிரிவைப் போலவே, சாமுவேலின் இந்த பிரிவு தெய்வீக கருணையின் மீது கவனத்தை ஈர்க்கும்போது, கிறிஸ்துவில் தேவனுடைய அதிக தயவை நாம் அங்கீகரிக்கிறோம். தேவன் சவுலுக்கு தனது அரசுரிமையை வழங்கியபோது தெய்வீக தயாளத்தையும், பின்னர் சவுலுக்கு பதிலாக தாவீதை தேவன் மாற்றியதால் இன்னும் அதிக தயாளத்தையும் நாம் காண்கிறோம். ஆனால் புதிய ஏற்பாடு தேவன் கிறிஸ்துவில் அதிக தயவைக் காட்டினார் என்று போதிக்கிறது. இன்று, இந்த அசாதாரண தயவை ஒப்புக்கொள்ள நமக்கு வாய்ப்புகள் உள்ளன. தேவன் கிறிஸ்துவைக் காட்டிய தயவை மட்டுமல்ல, கிறிஸ்துவை ஒவ்வொரு நாளும் பின்பற்றும்

அனைவருக்கும் அவர் காட்டும் தயவையும் அறிந்து கொள்ள நமக்கு வாய்ப்புகள் உள்ளன.

இரண்டாவதாக, சவுலின் நாட்களில் மனித விசுவாசத்தை நாம் கருத்தில் கொள்வதிலும் இதுவே உண்மையாக இருக்கிறது. தேவனுக்கு உண்மையாக இருக்க சவுல் தவறியதை இந்த அதிகாரங்கள் அம்பலப்படுத்துகின்றன. அவர் மீண்டும் மீண்டும் தேவனுடைய ஆராதனையை புறக்கணித்து கெடுத்தார். அரச அதிகாரத்திற்காக மோசேயின் விதிமுறைகளை அவர் மீண்டும் மீண்டும் மீறினார். சவுலின் தோல்விகள், தேவனுடைய ஆராதனையில் இயேசுவின் பழுதற்ற பக்தியுடனும், தாவீதின் பரிபூரண குமாரனாக மாசற்ற அவருடைய ஆட்சியுடனும் தெளிவாக வேறுபடுகின்றன. ஆவியிலும் சத்தியத்திலும் தேவனை ஆராதிப்பதற்கும், நம் சொந்த வாழ்க்கையில் இயேசுவின் பரிபூரண நீதியுள்ள ஆட்சியைப் பின்பற்றுவதற்கும் நமது பொறுப்பையும் அவை சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால் நம்முடைய புத்தகத்தின் இந்தப் பகுப்பு, தாவீதின் உண்மையுள்ள ஆராதனையின் மீது கூட கவனத்தை ஈர்க்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம், இயேசு பிதாவுக்கு வழங்கும் ஆராதனை தாவீதின் ஆராதனையை விட சிறப்பாக உள்ளது என்பதை நினைவூட்டுகிறோம். கிறிஸ்துவில் நமது ஆராதனை தாவீதின் ஆராதனையையும் விட அதிகமாக இருக்க வேண்டும். கூடுதலாக, தாவீது ராஜ அதிகாரத்தை கனம்பொருந்தச் செய்வதை நம் ஆசிரியர் சுட்டிக்காட்டும் ஒவ்வொரு முறையும், இயேசுவின் பரிபூரண அரசதிகாரத்தில் நாம் மகிழ்ச்சியடைகிறோம், அவருடைய முன்மாதிரியை நாம் எவ்வாறு பின்பற்றலாம் என்பதையும் கற்றுக்கொள்கிறோம்.

> **சாமுவேலின் புத்தகத்தில், கர்த்தர் தன்னை ஒரு பெரிய ராஜா என்று உணர்ந்த ஆணவக்கார சவுலிடமிருந்து சிங்காசனத்தை எடுத்து, அதை தாவீதுக்கு கொடுத்தார், அவர் ஆடுகளை மேய்ப்பதிலிருந்து ராஜாவாக அவரை அழைத்துச் சென்றார் என்பதை நாம் பார்க்கிறோம். 1 சாமுவேல் தாவீதின் அரசாட்சி, மகத்துவம் மற்றும் தேவனுக்குக் கீழ்ப்படிதல் ஆகியவற்றில் கவனம் செலுத்தினாலும், 2 சாமுவேலில் தாவீது ஒரு சிறந்த ராஜா அல்ல என்பதைக் காண்கிறோம். அவருடைய பாவங்களையும் பலவீனங்களையும் நாம் காண்கிறோம். நம்முடைய அவமானத்தை முழுவதுமாக நீக்கப்போகும் உண்மையான இரட்சகர் இஸ்ரவேல் மக்களுக்கு இன்னும் தேவை என்று இது நமக்குச் சொல்கிறது, இந்த நபர் இயேசு கிறிஸ்து ஆவார்.**

– Mr.ஷெரிப் அதெஃப் ஃபாஹிம், மொழிபெயர்ப்பு

மூன்றாவதாக, இந்த அத்தியாயங்கள் சாபங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் விளைவுகளின் மீது கவனத்தை ஈர்க்கின்றன. சவுலின் கீழ்ப்படியாமையின் விளைவாக விளைந்த சாபங்கள் நம்மை கிறிஸ்துவிடம் இழுக்கின்றன, அவர் அவரை நம்பும் அனைவருக்காக நித்திய சாபங்களைச் சுமந்தார். மேலும், இப்பொழுதும்கூட, நாம் அவரை விட்டு திரும்பும்போது தேவன் அவருடைய சபையை தற்காலிக சாபங்களால் சிட்சிக்கிறார் என்றும் அவர்கள் நம்மை எச்சரிக்கிறார்கள். அதேபோல, தேவனுக்கு உண்மையுள்ள சேவை செய்ததற்காக தாவீது பெற்ற ஆசீர்வாதங்களை நாம் காணும்போது, தேவனுக்கு கீழ்ப்படிதலுக்காக அளவிட முடியாத ஆசீர்வாதங்களைப் பெறும் கிறிஸ்துவை கனப்படுத்துகிறோம். இன்று தேவனுடைய தற்காலிக ஆசீர்வாதங்களையும், வரவிருக்கும் உலகில் அவருடைய நித்திய ஆசீர்வாதங்களையும் நாட நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியின் கிறிஸ்தவ பயன்பாடுகளை தேவனின் உடன்படிக்கைகளின் இயக்கவியலை நோக்கி நோக்குநிலைப்படுத்துவதோடு, கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யம் வெளிப்படுவதன் வெளிச்சத்திலும் இந்த அதிகாரங்களை நாம் பயன்படுத்த வேண்டும்.

## தேவனுடைய ராஜ்யம்

நாம் பார்த்தபடி, சாமுவேலின் ஆசிரியர் சவுலின் தோல்வியுற்ற அரசதிகாரத்தைப் பற்றி எழுதினார்; ஆகையால் அவருடைய ஆரம்ப வாசகர்கள் சவுலின் குடும்பத்தாருக்கான எல்லா நம்பிக்கையையும் கைவிட்டு, தேவனுடைய ராஜ்யத்திற்கான தங்கள் நம்பிக்கைகளை தாவீதினுடைய வீட்டின் நீதியுள்ள ஆட்சியில் வைப்பார்கள். இந்த காரணத்திற்காக, நாமும் தாவீதின் ஒரே பரிபூரண நீதியுள்ள அரச சந்ததியான இயேசுவில் மட்டுமே நம் நம்பிக்கைகளை வைக்க வேண்டும். சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியைப் பற்றிய விவரிப்பில் நமது ஆசிரியர் சுட்டிக்காட்டிய தேவனுடைய ராஜ்யத்திற்கான நம்பிக்கைகளை இயேசு மட்டுமே நிறைவேற்றுகிறார்.

ஆனால், நாம் முன்பு குறிப்பிட்டபடி, இயேசு ராஜ்யத்தை மூன்று கட்டங்களில் கொண்டு வருகிறார். அவர் தனது முதல் வருகையில் தனது ராஜ்யத்தின் தொடக்கத்துடன் தொடங்கினார். திருச்சபை வரலாறு நெடுகிலும் நிலைத்திருக்கும் அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியில் நாம் இன்று வாழ்கிறோம். யுகத்தின் முடிவில் அவர் மகிமையோடு திரும்பி வரும்போது அவருடைய ராஜ்யத்தின் முடிவை நாம் காண்போம்.

முதலாவதாக, தாவீதின் வீட்டில் மட்டுமே நம்பிக்கையைக் காண முடியும் என்பதை சவுலின் தோல்விகளிலிருந்து சாமுவேலின் ஆரம்ப வாசகர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கற்றுக்கொண்டனர். இதேபோல், கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்கத்தை நாம் திரும்பிப் பார்க்கிறோம், அங்கு இயேசு அவரது அற்புதங்கள், அவரது மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் அவரது பரமேறுதல் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அதை நிரூபித்தார். தேவனுடைய மகிமையான ராஜ்யத்தை பூமிக்கு கொண்டு வரும் ஒரே ராஜா அவர் ஆவார்.

இரண்டாவதாக, சாமுவேலின் அன்றைய வாசகர்களின் நாட்களில், தாவீதின் வம்சத்தை அதன் தோல்விகள் இருந்தபோதிலும் தேவன் ஆதரித்தார். மேலும், 2,000 ஆண்டுகளுக்கும் மேலாக, தேவனுடைய ராஜ்ஜியத்தின் தொடர்ச்சியின் போது, தேவனுடைய வாக்குத்தத்தங்கள் தவறவில்லை என்பதை அறியும் சிலாக்கியம் நமக்கு இருக்கிறது. தாவீதின் நீதியுள்ள குமாரனாகிய கிறிஸ்து பூமியின் எல்லைகள் வரை ராஜ்யத்தை விரிவுபடுத்த தேவன் அவரை நியமித்தார் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துள்ளார். பலர் இன்னும் மற்ற வழிகளைப் பின்பற்றினாலும், கிறிஸ்து தொடர்ந்து தேவனுடைய சத்துருக்களை முறியடித்து, தேவனுடைய ஆசீர்வாதங்களை தம்முடைய ஆவியின் வல்லமையினாலும், சுவிசேஷ பிரசங்கத்தினாலும், உலகம் முழுவதும் பொழிகிறார்.

மூன்றாவதாக, சாமுவேலின் ஆசிரியர் தனது அன்றைய வாசகர்களை எதிர்காலத்திலும் தாவீதின் சிங்காசனத்தின் முழு மறுசீரமைப்பிலும் தங்கள் கவனத்தை வைத்திருக்க அழைத்தார். அதேவிதமாக, சவுலின் தோல்வியுற்ற அரசதிகாரத்தைப் பற்றிய நமது ஆசிரியரின் பதிவு, கிறிஸ்து திரும்பி வரும்போது நம்முடைய சகாப்தம் முடிவடையும் வரை ஆவலுடன் காத்திருக்கும்படி நம்மை அழைக்கிறது. அந்த நேரத்தில், கிறிஸ்து மட்டுமே படைப்பின் மீது ஆட்சி செய்ய தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்பது ஒவ்வொரு சிருஷ்டிக்கும் தெளிவாக இருக்கும் என்பதை புதிய ஏற்பாடு நமக்கு உறுதியளிக்கிறது. இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும் (பிலிப்பியர் 2:10,11).

> **ஆகையால், புதிய ஏற்பாட்டில், உலகெங்கும் சிதறிக்கிடக்கும், ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும், தேசத்திலிருந்தும், மொழியிலிருந்தும் தம்முடைய ஜனங்களின் மீது கிறிஸ்துவின் ஆட்சி மூலம் தேவனுடைய ராஜ்யம் இப்போது உள்ளது என்று பார்க்கிறோம், ஒரு குறிப்பிட்ட இடத்தில், புவியியல் இடத்தில் அல்ல, ஆனால் நமது ஆவிக்குரிய வீடாகிய பரலோகத்தில் அமைந்துள்ளது. இயேசு திரும்பி வரும்போது தேவனுடைய ராஜ்யம் எப்படியிருக்கும் என்பதற்கான ஒரு கண நேர கண்ணோட்டத்தை புதிய**

> ஏற்பாடு தருகிறது, மேலும் அந்த ராஜ்யம் இப்போது இந்த உலகில் மறைந்திருகிறது. கிறிஸ்து திரும்பி வரும்போது அது தெளிவாகக் காணப்படும்; ஒவ்வொரு முழங்கால்களும் பணிந்து, ஒவ்வொரு நாவும் இயேசு கிறிஸ்து ஆண்டவர் என்று ஒப்புக்கொள்ளும், மேலும் தேவன் தம்முடைய ராஜாவாகிய கிறிஸ்துவின் மூலமாக அவரை அறிந்த, பிதா என்று அழைக்கும் மக்களை பரலோகத்திலுள்ள புதிய எருசலேமில் முழுமையாக ஆட்சி செய்வார்.
>
> – Dr. கான்ஸ்டன்டைன் காம்ப்பெல்

இந்த நிகழ்வுகள் தாவீதின் ஆட்சிக்கு வழிவகுத்ததால் இஸ்ரவேல் தவறான திருப்பத்தை எடுக்கவில்லை என்பதை சாமுவேலின் புத்தகத்தின் ஆசிரியர் கவனமாக நிரூபித்தார். மாறாக, தேவனே ஒவ்வொரு அடியையும் வழிநடத்தினார். தாவீதை இஸ்ரவேலின் ராஜாவாக உயர்த்தியது மட்டுமல்லாமல், கிறிஸ்துவை உலகத்தின் ராஜாவாக உயர்த்தவும் இந்த நிகழ்வுகள் அனைத்தையும் தேவன் வழிநடத்தினார் என்பதை சாமுவேல் புத்தகத்தின் இந்த அத்தியாயங்கள் நமக்கு உறுதியளிக்கிறது.

# முடிவுரை

சாமுவேல் மற்றும் சவுலைக் குறித்த இந்த பாடத்தில், தாவீது இஸ்ரவேலின் ராஜாவாக ஸ்தாபிக்கப்படுவதற்கு வழிவகுத்த பல நிகழ்வுகளை சாமுவேல் நூலின் ஆசிரியர் எவ்வாறு ஆராய்ந்தார் என்று பார்த்தோம். அவர் தனது புத்தகத்தின் முதல் பிரிவில் சாமுவேலின் அரசாட்சிக்கான முகவுரையை எவ்வாறு வழங்கினார் என்பதையும், சவுலின் தோல்வியுற்ற அரசாட்சியை அவர் தனது புத்தகத்தின் இரண்டாம் பிரிவில் எவ்வாறு வழங்கினார் என்பதையும் நாம் ஆராய்ந்தோம்.

சாமுவேல் புத்தகத்தை முதன்முதலில் பெற்றவர்களைப் போலவே நாமும் இந்த உலகத்தில் பிரச்சனைகளை எதிர்கொள்கிறோம். கிறிஸ்துவில் தேவனுடைய ராஜ்யத்தின் வெற்றியின் நம்பிக்கையை இழக்க அந்த பிரச்சனைகள் அடிக்கடி நம்மைத் தூண்டுகின்றன. ஆனால், சாமுவேல் மற்றும் சவுலின் வாழ்க்கையின் மூலம் தாவீதின் ஆட்சிக்கு தேவன் எவ்வாறு வழியை ஆயத்தம் செய்தார் என்பதை நாம் தாழ்மையுடன் சிந்திக்கும்போது, எதிர்காலத்திற்கான நமது நம்பிக்கைகளை தாவீதின் வீட்டின் நீதியான



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஆட்சியிலும் வைக்க அவரது வார்த்தைகள் நம்மை ஊக்குவிக்கின்றன. தாவீதின் நீதியுள்ள குமாரனாகிய இயேசு வந்துவிட்டார். இன்று நாம் எதிர்ப்படும் சோதனைகள் மத்தியிலும், தம்மை விசுவாசிக்கும் அனைவருக்கும் தேவனுடைய ராஜ்யத்தின் பரிபூரணத்தில் முடிவில்லா ஆசீர்வாதங்களாகிய நித்திய சுதந்தரத்தை அவர் அருளுவார் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.